Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx. Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்கள்
அனுப்பிட நீங்கள் நாட வேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Violag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836 E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ.ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆவணி 31 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ரஜப் 30 (16.09.2004) வியாழக்கிழமை இதழ்:349

# தீர்வுகள் இல்லாத பேச்சுக்களால் மக்கள் விரக்தியடைந்துள்ளனர்

## யாழ். வந்த சொல்ஹெய்மிடம் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

**தீர்வுகள் எதுவும் ஏற்படாமல் முன்னெடுக்கப்படுகின்ற சமாதான முயற்சிகள் மூலம் எமது மக்கள் எந்தப் பயனையும் அடையவில்லை. இதனால் அவர்கள் ஒரு விரக்தி நிலைக்குள் தள்ளப்பட்டுள்ளனர். தற்போதைய நிலையில் தீர்வுகளுடன் கூடிய பேச்சுக்கள் நடப்பதையே விரும்புகின்றனர் என யாழ். மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் தெரிவித்தார். யாழ்.மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் நேற்று இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.**

**இந்தச் சந்திப்புக் குறித்து செய்தியாளர் மத்தியில் அவர் கருத்துத் தெரிவிக்கையில் –**

நோர்வேயின் விசேட தூதுவருடனான சந்திப்பின்போது உயர் பாதுகாப்பு வலயம் காரணமாக மக்கள் எதிர்நோக்கும் துன்ப துயரங்களை நாம் சுட்டிக் காட்டியுள்ளோம். அதைவிட கடற்றொழிலாளர்களுக்கு ஒவ்வொரு நாளும் துன்புறுத்தல்களும், உயிரைப் பணயம் வைத்து மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றபோது அதனைக் குறிப்பிட்ட நேரத்தில் சந்தைப்படுத்துவதற்கு அவர்களுக்கு ஏற்படுகின்ற தடைகள் குறித்தும், அதனால் மீனவர்களுக்கு ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பீடுகள் தொடர்பாகவும் தெளிவாக விளக்கியுள்ளோம்.

இதைவிட - விவசாயிகள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள் தொடர்பாகவும். குறிப்பாக தென்னைச் செய்கையாளர்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டு இருப்பதனையும் நாம் புள்ளிவிபர ரீதியாக விளக்கியுள்ளோம்.

அதேவேளை - தீர்வுகள் எதுவும் இல்லாது முன்னெடுக்கப்படுகின்ற சமாதான முயற்சிகளின் மூலம் எமது மக்கள் எந்தப் பயனையும் அடையவில்லை. மாறாக- ஒரு விரக்தி நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே தீர்வுகளுடன் கூடிய கருத்துக்களை முன்வைப்பது வரவேற்கத்தக்கது என நாம் தெரிவித்திருக்கின்றோம். ஏனெனில் - தற்போதைய நிலையில் மக்கள் இதனைத் தான் எதிர்பார்க்கின்றார்கள்.

யாழ். குடாநாட்டு மக்கள் தமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.குடாநாட்டு நிலைமையை சொல்ஹெய்ம் பார்வையிட்டார்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் தற்போதைய நிலவரம் தொடர்பாக ஆராய்வதற்கு நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தலைமையிலான நோர்வே தூதுக்குழு நேற்று யாழ்.குடாநாட்டிற்கு விஜயம் செய்தது.

விமானப்படை விமானம் மூலமாக பலாலியை வந்தடைந்த இவர்கள் நேற்றுக்காலை 10.30 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக விவசாய பீடத்தில் மனித உரிமைக்கும், அபிவிருத்திக்குமான தமிழ்பேசும் மக்களின் அமைப்புப் பிரதிநிதிகளான விவசாய பீடாதிபதி அ.இராசதுரை, தமிழர் ஆசிரியர் சங்கச் செயலாளர் பஞ்சலிங்கம், சி.வி.கே.சிவஞானம் ஆகியோரை சந்தித்துக் கலந்துரையாடினர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



யாழ்.அரசியற்துறை - சொல்ஹெய்ம் சந்திப்பில்...

## யுத்தம் ஏற்படக்கூடாதென்பதையே வெளிநாடுகளும் விரும்புகின்றன!

### யாழில் எரிக்சொல்ஹெய்ம்

(யாழ்ப்பாணம்)

வெளிநாடுகள் தொடர்பாக ஊடகங்களில் வெளிவருகின்ற கருத்துக்கள் தவறானவை. உலகநாடுகள் அனைத்துமே இலங்கைத்தீவில் சமாதானம் மலர வேண்டும் என்றும், இனிவரும் காலங்களில் யுத்தம் ஏற்படக்கூடாது என்ற நிலைப்பாட்டுடன் செயற்படுகின்றதாக நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்தார்.

நேற்று யாழ் குடா நாட்டிற்கு இரண்டாவது தடவையாக வருகைதந்த நோர்வேயின் சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளைச் சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டுப்படைத் தளபதியாக சந்தகிரி பதவியேற்றார்!

## இன்னுமொரு போர்க்கப்பலை இந்தியாவிடம் வாங்க முடிவு!

இந்தியாவிடமிருந்து சுகன்யா

யேற்ற பின்னர் ஊடகவியலாளர்

இதற்கான நடவடிக்கைகளை

# கூட்டுப்படைத் தளபதியாக சந்தகிரி பதவியேற்றார்!



முப்படைத் தளபதிகள், சிரேஷ்ட அதிகாரிகளுடன் சந்தகிரி

(கொழும்பு)

கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, கூட்டுப்படைகளின் தலைமைத் தளபதியாக நேற்றுப் பொறுப்பேற்றுக்கொண்டார்.

நேற்றுக்காலை இராணுவத் தலைமையகத்தில் உள்ள கட்டுப்பாட்டுத் தலைமையகத்தில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்வில் முதலில் முப்படைகளின் அணி வகுப்பு இடம்பெற்றது.

இதன் பின்னர் சமய நிகழ்வுகளை அடுத்து தனது பதவியை வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி பொறுப்பேற்றுக் கொண்டார். இந்த நிகழ்வில் முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபர் விசேட அதிரடிப்படைக் கட்டளை அதிகாரி உள்ளிட்ட சிரேஷ்ட படையதிகாரிகள் கலந்து கொண்டனர்.

கூட்டுப்படைத் தளபதியாக கடற்படைத் (12 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகிவிடும்.

- தியாகி லெப்.கேணல் திலீபன்



# இந்தியாவிடம் வாங்க முடிவு!

இந்தியாவிடமிருந்து சுகன்யா ரக கரையோர ரோந்துக் கப்பல் ஒன்றைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக முப்படைகளின் பிரதம தளபதியும், கடற்படைத் தளபதியுமான வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி தெரிவித்தார்.

முப்படைகளின் பிரதம தளபதியாக நேற்றுப் புதிதாகப் பதவியேற்ற பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் உரையாற்றிய போதே- அவர் இவ்வாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

இந்தியாவிடமிருந்து மற்றுமொரு சுகன்யா ரக கரையோர ரோந்துக் கப்பல் ஒன்றை கொள்வனவு செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியா சென்ற சமயம் மேற்கொண்டிருந்தார். இது 150 மில்லியன் டொலர் கடன் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கப்படவுள்ளது.

விடுதலைப்புலிகளால் திருமலைத் துறைமுகத்துக்கு மிக நீண்ட காலமாகவே அச்சுறுத்தல் இருந்து வருகின்றது. (12 ஆம் பக்கம் பார்க்க)

# தியாகி திலீபன் நினைவு நாள் நேற்று எழுச்சியுடன் ஆரம்பம்!

உண்ணா நோன்பிருந்து தன்னுயிரைத் தியாகம் செய்த தியாகி லெப்.கேணல் திலீபனின் 17 வது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகளின் ஆரம்பநிகழ்வு நல்லூரில் நினைவுத்தூபி அமைந்துள்ள இடத்தில் நேற்றுக் காலை 9.15 மணியளவில் யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சூ.சிறில் தலைமையில் ஆரம்பமானது.

ஆரம்ப நிகழ்வாக பொதுச்சுடரை மாவீரர் அர்ச்சுனாவின் தந்தை சதாசிவம் ஏற்றிவைத்தார். தியாகி திலீபனின் திரு உருவப்படத்துக்கான ஈகச்சுடரை யாழ்.மாவட்ட மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவிழி ஏற்றிவைத்து மலர் மாலை அணிவித்தார். தேசியக் கொடியினை கடற்புலிகளின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் அருணன் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து நினைவுரையை யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.புலேந்திரராசா ஆகியோர் நிகழ்த்தினர்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப்பணியாளர்கள், தேசிய எழுச்சிப் பேரவை உறுப்[illegible] பொது அமைப்



புக்களின் பிரதிநிதிகள் ஆகியோர் உட்பட பெருமளவானோர் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

இதேவேளை, யாழ்.குடாநாட்டில் பல்கலைக்கழகம், பாடசாலைகள் தனியார் நிறுவனங்கள், சந்திகள் எங்கும் தியாகதீபம் லெப்.கேணல் திலீபன் திரு உருவப்படத்துக்கு மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

# சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு முன் நிதியுதவி வழங்குவதை நோர்வே அரசு நிறுத்தவேண்டும்!

## குடாநாட்டு பொதுஅமைப்புக்கள் சொல்ஹெய்ம் ஊடாக நோர்வே பிரதமருக்கு மகஜர்

### பொது அமைப்புக்களின் ஒன்றியம

அரசின் இழுத்தடிப்பினால் சமாதான முயற்சிகள் கடந்த இருபது மாதங்களாக முடங்கியுள்ளன. அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல்படுத்த அரசுபோதிய நடவடிக்கை எடுக்காததால் தமிழர்கள் எதிர்பார்த்த இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. அமைதி, சமாதானம், கேள்விக்குறியாகியுள்ளது. உடனடி மனிதாபிமானப் பணிகள் கூட நிறைவேற்றப்படாததால் தமிழர்களின் வாழ்வு பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை யோசனையை அரசு இழுத்தடிப்புச் செய்து வருவதால் தீர்வை நோக்கிச் செல்ல முடியவில்லை.

இந்தவேளையில் 2005 ஆம் ஆண்டில் இலங்கையில் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுதது செல்வதற்கு 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை தங்கள் அரச உதவியாக வழங்கவுள்ளது. இதனை நாங்கள் வன்மையாக எதிர்க்கின்றோம். ஏனெனில் இவ்வாறான நிதியுதவிகள் அமைதித்தீர்வைக் கேள்விக் குறியாககிவிடும்.

இராணுவத் தீர்வின் மீது ஆசை கொள்ளும் பேரினவாத அழுத்தங் கொண்ட ஆட்சியாளர்கள் இந்த நிதியினூடாக இராணுவ பலத்தை அதிகரித்து மீண்டுமொரு போரை தமிழர் மீது திணிப்பார்கள்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையை புறந்தள்ளி சமாதான முன்னெடுப்புக்களை முடக்கி, தமிழ் விரோத ஆயுதக்குழுக்களை உலாவவிட்டு இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை இழுத்தடிக்கும் அரசிற்கு, ஒருதலைப்பட்சமாக சர்வதேச சமூகம் அபிவிருத்தி என்ற போர்வையில் நிதியுதவி வழங்குமானால் அதனை தமிழ்மக்கள் முற்றாக எதிர்ப்பார்கள்.

பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களை இனப்படுகொலை செய்து, அப்பட்டமான மனித உரிமைகளை மீறிய அரசிற்கு சர்வதேச சமூகம் நிதியுதவி அளிப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

தீர்வு அல்லாத சமாதானத்தை நாம் வெறுக்கின்றோம். இந்த நிலை தொடருமானால் தமிழீழ விடுதலைப் புலிகளும், நாங்களும் சமாதானப் பாதையில் இருந்து விலகிப்போகும் தவிர்க்கமுடியாத சூழ்நிலை உருவாகும்.

தீர்வு இல்லாத பேச்சுவார்த்தை எதற்கு? தமிழர் தரப்புப் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை என்ற போர்வையில் காலத்தை இழுத்தடிப்பது தமிழ்மக்களை பெரிதும் விசனத்துக்குள்ளாக்கியுள்ளது.

எனவே தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்கும் வரை இலங்கைக்கான நிதியுதவிகளை - தங்கள் நாடோ அல்லது சர்வதேச நாடுகளோ வழங்குவதை நிறுத்திக்கொள்ளவேண்டுமென யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தங்களிடம் வலியுறுத்தி வேண்டியுள்ளது.

### யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் ஒன்றியம்

இராணுவத் தீர்வின் மீது நாட்டம் கொண்ட பேரினவாத ஆட்சியாளர்களின் இன்றைய போக்கை அறிந்திருந்தும் 2005 ஆம் ஆண்டிற்கான நிதியுதவியாக 30 மில்லியன் அமெரிக்க டொலர்களை தங்கள் அரசு வழங்கவிருப்பது சமாதான முயற்சிகளுக்கு பெரும் பாதகமாக அமையும் என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

தமிழ் மக்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வு கிடைக்கும் வரை சர்வதேச நிதியுதவிகள் அனைத்தையும் தடுப்பதன் மூலமே சமாதானத்தை முன்னெடுக்கமுடியும். அரச அபிவிருத்தி என்ற போர்வையில் நிதியுதவிகள் வழங்குவதை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பது தமிழ் மக்களின் ஏகோபித்த குரலாகும். அதுவே நீடித்த நிலைதத சமாதானத்திற்கு வழிவகுக்கும்.

புரிந்துணர்வு உடன்படிக்கையை அரசு சரிவர அமுல்படுத்தாததால் இயல்பு வாழ்க்கை ஏற்படவில்லை. அமைதி,சமாதானம், உருவாகவில்லை. உடனடி மனிதாபிமானப் பணிகள்கூட நிறைவேற்றப்படவில்லை. இதனால் புரிந்துணர்வு உடன்படிக்கை கேள்விக் குறியாகியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தில் நடுநிலை பேணும் தங்களைப் போன்ற நாடுகள் அரசிற்கு நிதியுதவி அளிக்குமானால், அது யுத்தத்தை தூண்டுவதாகவே அமையும். இராணுவச் சமநிலை குழம்பவும் ஆயுதப் பெருக்கம் ஏற்படவுமே வழிவகுக்கும். அது முற்றுமுழுதாக சமாதானச் சூழலை தாக்கி அழித்துவிடும்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் எந்தவித கலந்தாலோசனையும் இல்லாமல் ஒருதலைப் பட்சமாக வடக்கு - கிழக்கு புனரமைப்பு என்ற போர்வையில் அரசிற்கு நிதியுதவிகளை சர்வதேச நாடுகள் வழங்குமானால் அதனைத் தமிழர்கள் முற்றுமுழுதாக எதிர்ப்பார்கள்.

எதைச் செய்யவேண்டுமானாலும் தீர்வுவேண்டும். தீர்வு இல்லாத சமாதானத்தை நாம் வெறுக்கிறோம். இந்த நிலை தொடருமானால் புலிகளும், நாங்களும் சமாதானப் பாதையிலிருந்து விலகிப்போவது தவிர்க்க முடியாததாக அமையும் என கூட்டுறவாளர்களின் சார்பாக எமது கருத்தை ஆழமாக வலியுறுத்துகிறோம் எனத் தெரிவிதக்கப்பட்டுள்ளது.

## தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கம் மீண்டும் பழைய இடத்தில்!

1990ஆம் ஆண்டு இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த நிலையில் இயங்கிவந்த தெல்லிப்பளை கூட்டுறவுச் சங்கம் சுமார் 14 வருடங்களுக்குப் பின்னர் நேற்று மீண்டும் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

நேற்று இடம்பெற்ற நிகழ்வில் வலி. வடக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் வி.இராஜகோபால் மங்கள விளக்கேற்றி அலுவலக நடவடிக்கைகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

தெல்லிப்பழை கூட்டுறவுச்சங்கத் தலைவர் இ.சிவமகாராசா தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சங்கப் பணியாளர்கள் மற்றும் 515 ஆவது பிரிகேட் தளபதி பிரிகேடியர் மோகன் ஜெயவர்த்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.


**சிறு விளம்பரம்**

**முகமதி கிறைண்டிங் மில்**

வெள்ளைப் பிட்டுக்கலவை, சிவப்புப் பிட்டுக்கலவை, திடீர் தோசைக் கலவை, திடீர் அப்பக் கலவை ஆகியவற்றை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள - முகமதி கிறைண்டிங் மில்ஸ் அன் ஸ்ரோர்ஸ். இல : 777, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம் (C/3022)













# மீண்டும் அடுத்த வாரம் அமைச்சரவை மாற்றம்!

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையில் அடுத்த வாரம் மாற்றம் இடம்பெறவுள்ளதாக, அரசாங்கத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன.

இதன்படி மலை நாட்டு அபிவிருத்தி, அஞ்சல் தொலைத் தொடர்பு அமைச்சராக பதவி வகிக்கும் டி.எம்.ஜெயரத்னவிடமிருந்து மலை நாட்டு அபிவிருத்தி அமைச்சை எடுத்து, முன்னர் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சராக இருந்த சி.பி.ரத்னாயக்காவிற்கு வழங்கப்படவுள்ளது.

இந்த நிலையில் சி.பி.ரத்னாயக்கா மற்றும் எஸ்.எம்.சந்திரசேன ஆகியோர் இன்று ஜனாதிபதியைச் சந்தித்து அமைச்சுப் பதவிகள் தொடர்பாகக் கலந்துரையாடவுள்ளனர். மலையக மக்களுக்கு சேவையாற்றவென, தனக்கு மலையகத்துடன் தொடர்புடைய அமைச்சை வழங்குமாறு சி.பி.ரத்னாயக்கா ஜனாதிபதியை கேட்டுக்கொள்ளவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவித்தன.

இதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரசுக்கு மேலும் இரண்டு பிரதி அமைச்சர்கள் பதவி வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (தே)

# மனித உரிமைகள் செயலகத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பு!

வட - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் கருணாரட்ணம் அடிகளாருக்கும், தென்பகுதி ஊடகவியலாளர்களுக்குமான சந்திப்பொன்று கடந்த திங்கட்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்றது.

கிளிநொச்சி மனித உரிமைகள் செயலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பின்போது, கருணாரட்ணம் அடிகளார் வரவேற்புரை நிகழ்த்துகையில் - கடந்த காலங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக வட - கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட மனித உரிமைகள் மீறல் தொடர்பாக விளக்கினார்.

இந்த நிலையில் - தென்பகுதியிலிருந்து வெளிவருகின்ற சிங்கள, ஆங்கில ஊடகங்கள் இதனைக் கண்டித்து எந்தவகையிலும் குரல் எழுப்பவில்லை. இதன் காரணத்தினால் தென்பகுதி மக்களுக்கு, வட - கிழக்கிலுள்ள தமிழ்மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாக எதுவுமே தெரியாத நிலையில் உள்ளனர்.

இந்தவகையில், தென்னிலங்கை சிங்கள, ஆங்கில ஊடகங்கள் பெரும்பங்காற்ற வேண்டும் என அவர் மேலும் கேட்டுக்கொண்டார்.

தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் வட-கிழக்கின் மனித உரிமைகள் செயலகத்தின் தற்போதைய நடவடிக்கை தொடர்பாக பல கேள்விகளைக் கேட்டுத் தெளிவு பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க பீரங்கிகள் கொள்வனவுக்கு கடற்படைத் தளபதி சந்தகிரி எதிர்ப்பு!

(கொழும்பு)

இலங்கைக் கடற்படைக்கு அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கிய கரேஜஸ் என்ற கப்பலுக்கு, அமெரிக்கத் தயாரிப்பான 57 மில்லி மீற்றர் கனன் துப்பாக்கிகளைப் பொருத்துவதற்கு இலங்கைக் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பீரங்கிகள் 5 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியாகவிருந்தாலும் (இலங்கைப் பெறுமதியில் 500 மில்லியன் ரூபா) இதனை ஐம்பது வீதம் கழிவுடன் 2.5 மில்லியன் டொலருக்கு வழங்குவதற்கு அமெரிக்கா தயாராக இருந்தது. எனினும், அவற்றைக் கொள்வனவு செய்ய கடற்படைத் தளபதி தயா சந்தகிரி மறுத்துவிட்டார்.

அமெரிக்கா இந்தப் பீரங்கிகளின் விலையை ஐம்பது வீதத்தினால் குறைக்க முன்வந்தாலும், அந்தப் பீரங்கிகளின் விலைகள் அதிகமானதெனவும் அவர் தெரிவித்தார்.

ஆனாலும், இதற்கு பிரதியீடாக சந்தகிரி ஒரு திட்டத்தையும் முன்வைத்துள்ளார். இதன்படி இந்தியாவிலிருந்து வாங்கப்பட்ட எஸ்.எல்.என்.எஸ்.சயுர என்ற கப்பலிலுள்ள பீரங்கிகளைக் கழற்றி அமெரிக்காவில் நிற்கும் கரேஜஸ் கப்பலில் பொருத்தி அதனை இலங்கைக்கு கொண்டு வரலாமெனவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்கா அன்பளிப்பாக வழங்கிய கரேஜஸ் என்ற கப்பலைத் திருத்துவதற்கும், அதனைச் செலுத்துவதற்கும் மாலுமிகளுக்கு பயிற்சி வழங்குவதற்குமென இலங்கை அரசு 6.9 மில்லியன் அமெரிக்க டொலரைச் செலுத்த வேண்டியுள்ளது.

கடற்படைத் தளபதி தயா சந்தகிரி எழுப்பிய பிரச்சினை தொடர்பாக, அண்மையில் நடந்த தேசிய பாதுகாப்பு சபை கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இதில் கலந்துகொண்ட வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், கடற்படைத் தளபதி தயா சந்தகிரி அமெரிக்கப் பீரங்கிகளை வாங்க மறுப்பதை விடுத்து, அதனை வாங்குவதற்கு முயற்சிசெய்ய வேண்டுமெனவும், பீரங்கிகள் விலை அதிகம் மற்றும் இதர பிரச்சினைகள் தொடர்பாக பாதுகாப்பு அதிகாரிகள் முடிவெடுக்கக்கூடாது. இத்தகைய முடிவுகளை எடுப்பது அரசாங்கத்தின் கடமை எனவும் தெரிவித்தார்.

ஆனாலும், கடற்படைத் தளபதி-அமெரிக்க பீரங்கிகள் தேவையில்லையெனில் அதை வாங்க வேண்டாமென ஜனாதிபதியும் தெரிவித்துள்ளார்.

திறைசேரி இந்தப் பீரங்கிகள் கொள்வனவிற்கான பணத்தை வழங்க முன்வந்தபோதும், கடற்படைத் தளபதி பீரங்கி கொள்வனவை நிராகரித்ததால் இந்தப் பணம் வழங்கப்படவில்லை.

தற்போதைய திட்டத்தின்படி இந்தியாவிலிருந்து வாங்கிய சயுர கப்பலிலுள்ள 40,60 மில்லிமீற்றர் போபர்ஸ பீரங்கிகளை கழற்றி அமெரிக்காவிலுள்ள கரேஜஸ் கப்பலுக்கு பொருத்தி, அதனை இலங்கைக்கு கொண்டு வர முடிவெடுக்கப்பட்டுள்ளது.



இதனுடன் சீனாவின் நொறிங்கோ ஆயுத நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட இயந்திரத் துப்பாக்கிகள், மற்றும் அந்த நிறுவனத்தின் பிற ஆயுதங்களையும் இலங்கையிலிருந்து கொண்டு சென்று கரேஜஸ் கப்பலுக்குப் பொருத்த அதிகாரிகள் தீர்மானித்துள்ளனர்.

ஆனாலும், நொறிங்கோ ஆயுத நிறுவனத்தின் ஆயுதங்களை அமெரிக்காவிற்கு கொண்டுசெல்ல, அந்த நாடு எதிர்ப்புத் தெரிவிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில் -

இந்த ஆயுத நிறுவனம் அணு ஆயுத உற்பத்திப் பொருட்களை ஈரானுக்கு வழங்கிவருவதாக குற்றஞ்சாட்டி அந்த நிறுவனம் மீது அமெரிக்கா பொருளாதாரத் தடை விதித்துள்ளது.

ஆனாலும் இந்த ஆயுதங்களை அமெரிக்காவில் பயன்படுத்த கொண்டு செல்லவில்லையெனவும், கப்பலில் பொருத்தவே கொண்டு செல்லவுள்ளதாகவும் அமெரிக்காவிற்கு தெரிவித்து அனுமதியைப் பெறவுள்ளதாகவும் இலங்கை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, இலங்கையின் இராணுவம், கடற்படை, விமானப் படை மற்றும் பொலிஸாருக்கு ஆயுதங்களை தொடர்ந்து பெற்றுக் கொள்ளும் வகையில் கடந்தமாதம் பாதுகாப்பு அமைச்சின் செயலர் சிறில் ஹேரத், சீனாவின் நொறிங்கோ ஆயுத உற்பத்தி நிறுவனத்துடன் ஒப்பந்தமொன்றைக் கைச்சாத்திட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

### பல்கலை பேராசிரியர்கள் பேச்சுக்கு எதிர்ப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் முன்வைத்துள்ள இடைக்கால நிர்வாக சபையின் அடிப்படையில் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள வேண்டாம் என்று, தேசிய பல்கலைக்கழக பேராசிரியர்களின் கூட்டமைப்பு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளது.

தேசிய பல்கலைக்கழக பேராசிரியர்களின் கூட்டமைப்பின் மாநாடு கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பலதரப்பட்டவர்களிடம் இருந்து வருகின்ற அழுத்தங்களுக்கு அரசாங்கம் அடிபணியக்கூடாது என்றும் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் ஒற்றுமையை உறுதிப்படுத்தும் வகையில் தீர்வுகள் எட்டப்படவேண்டும் என்றும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த மாநாட்டில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

### இரத்த தானம்

பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபாவினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள இரத்ததான தினம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ளது.

வட பிராந்திய சத்திய சாயி சேவா நிறுவன இணைப்புக்குழுவின் ஏற்பாட்டில், அன்றுகாலை 9 மணி முதல் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவா நிலையத்திலும் இரத்ததானம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் போதனா வைத்தியசாலை இரத்த வங்கி அதிகாரிகள் பங்குபற்றி இரத்தத்தைச் சேகரிப்பர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (111)

### இடைக்கால நிர்வாக யோசனைக்கு

# மாற்றீடான கொள்கையை முஸ்லிம் காங்கிரஸ் தயாரிப்பு!

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாகசபை யோசனைகளுக்கு மாற்றீடாக கொள்கை ஒன்றினைத் தயாரித்துள்ளதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நோர்வேயின் இலங்கைக்கான விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்மை சந்தித்துப் பேசிய பின்னர், ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டு நேற்றுமுன்தினம் கொழும்புக்கு வந்த நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமை கொழும்பில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் சந்தித்து சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது தொடர்பாகக் கலந்துரையாடினார்.

கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்றுவரும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாகவும், இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்தார்.

# கொழும்பில் கைதான இளைஞர்கள் விடுவிப்பு!

(கொழும்பு)

கொழும்பு - காலிமுகத்திடலிலுள்ள உலக வர்த்தக மையக் கட்டடம், தாஜ் சமுத்திரா மற்றும் கலதாரி ஹோட்டல்களை படம் பிடித்தார்கள் எனத் தெரிவித்து இரண்டு தமிழ் இளைஞர்கள் பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த ஞாயிறு இரவு 7.30 மணியளவில் இந்தத் தமிழ் இளைஞர்கள் இருவரும் இந்த முக்கிய இடங்களைப் படம் பிடித்துக்கொண்டிருந்த வேளை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டனர்.

இதன் பின்னர் இவர்கள் இருவரதும் வாக்குமூலங்களைப் பதிவு செய்த கொள்ளுப்பிட்டி பொலிஸார், கடந்த திங்கட்கிழமை இருவரையும் விடுதலை செய்ததுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

# அமைச்சர் எஸ்.பி திஸநாயக்க தாக்கல் செய்த மனு நிராகரிப்பு



(கொழும்பு)

லஞ்ச ஆணைக்குழுவின் விசாரணைகளை இடைநிறுத்துமாறு கோரி முன்னாள் சமுர்த்தி அமைச்சர் எஸ்.பி.திஸநாயக்க தாக்கல் செய்த மனுவை உயர் நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

தனக்கும் தனது குடும்ப உறுப்பினர்களுக்கும் எதிராக பாரபட்சமான முறையில் விசாரணைகள் இடம்பெற்றுவருதாகவும், அதனைத் தடுத்து நிறுத்தும்படியும் எஸ்.பி.திஸநாயக்க மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அநாமதேய மனு ஒன்றின் அடிப்படையில் எஸ்.பி.திஸநாயக்கவுக்கு எதிராக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, ஜனாதிபதி சட்டத்தரணி திலக் மாரப்பன தெரிவித்தார்.

மூன்று நீதிபதிகள் கொண்ட குழு - லஞ்ச ஆணைக்குழுவுக்கு அநாமதேய முறைப்பாடு, வேறு தகவல் மூலம் விசாரணைகள் நடத்தும் அதிகாரம் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

அரசியல்வாதிகளுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படக் கூடாதென்றும் நீதிபதிகள் வலியுறுத்தினர்.

மனு மீதான விசாரணையை ஷிரானி பண்டாரநாயக்க, ராஜா பெர்ணான்டோ, எம்.எஸ்.யாப்பா ஆகிய மூன்று நீதிபதிகள் மேற்கொண்டனர்.

எஸ்.பி.திஸநாயக்க சமுர்த்தி அமைச்சராக இருந்த காலத்தில் சமுர்த்தி அமைச்சின் நிதியை பயன்படுத்தி - பான் ஏசியா வங்கியின் பங்குகளை கொள்வனவு செய்தமை மற்றும் 60 லட்சம் ரூபா செலவில் ஆடம்பர வீடு ஒன்றைக் கட்டியமை தொடர்பாக லஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை செய்து வருகின்றது.

## ஊர்காவல்படையினரை விடுவிக்குமாறு திருமலையில் மறியல் போராட்டம்!

(திருகோணமலை)

கடந்தமாதம் பத்தாம் திகதி திருகோணமலை கல்லம்பற்றை என்ற இடத்தில் வைத்து விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டுள்ள இரண்டு ஊர்காவற்படையினரையும் விடுவிக்கக் கோரி, நேற்றுமுன்தினம் திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு முன்னால் மறியற் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு பௌத்த சங்கம் என்ற அமைப்பின் செயலாளர் அநுர பண்டாரவின் தலைமையில் நேற்றுமுன்தினம் பகல் 11.45 மணியளவில் கோமரங்கடவெல பகுதியைச் சேர்ந்த சுமார் 60 பேர் இந்த மறியற் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மறியற் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களில் சுமார் 20 பேர் மணிக்கூட்டுக் கோபுரத்திற்கருகில் சிறிய கொட்டகை ஒன்றை அமைத்து, சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூன்று நாட்களுக்குள் இரண்டு ஊர்காவற் படையினரையும் விடுதலை செய்வது தொடர்பாக தீர்க்கமான முடிவேதும் தெரிவிக்கப்படாவிட்டால், தமது சத்தியாக்கிரகப் போராட்டத்தை தொடர் உண்ணாவிரதப் போராட்டமாக மாற்றப்போவதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, இந்த மறியற் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் திருகோணமலையில் அமைந்துள்ள மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்கு முன்னால், ஆர்ப்பாட்டத்தை நடத்தலாமென எதிர்பார்த்து கண்காணிப்புக் குழு அலுவலகம் முன் பெருமளவில் படையினரும், பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். (04)

# நோர்வே தூதுக்குழுவின் யாழ்ப்பாண விஜயம்



பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் இருந்து மகஜர்களைக் கையேற்கிறார் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம்.



யாழ்.பொது அமைப்புப் பிரதிநிதிகள் - சொல்ஹெய்மை வரவேற்கின்றனர்.

# தமிழீழ மீட்புநிதிக் கடன் மீளளிப்பு - 2004

## வவுனியா உதவி அரச அதிபர் பிரிவு

1 . வ/வ/ 11 திரு. சபாபதி வேலுப்பிள்ளை
2 . வ/வ/ 33 திருமதி. வள்ளிப்பிள்ளை இராசையா
3 . வ/வ/ 45 திரு. சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம்
4 . வ/வ/ 62 திரு. செல்வச்சந்திரன் செல்வேஸ்வரன்
5 . வ/வ/ 71 திரு. கார்த்திகேசு சிவராசா
6 . வ/வ/ 80 திரு. சண்முகம் தனபாலசிங்கம்
7 . வ/வ/ 105 திரு. கந்தையா நாகேஸ்வரன்
8 . வ/வ/ 112 திரு. கனகசபை மகேந்திரன்
9 . வ/வ/ 113 திரு. நடராசா சுந்தரமூர்த்தி
10 .வ/வ/ 173 திரு. செல்லத்துரை செல்வசிறிதரன்
11 .வ/வ/ 184 திரு. கந்தையா சதாசிவம்
12 .வ/வ/ 217 திரு. வயிரமுத்து ஏரம்பு
13 .வ/வ/ 228 திரு. கந்தையா சிவஞானசுந்தரம்
14 .வ/வ/ 240 திரு. பாராஜசேகரசிங்கம் பூபாலசிங்கம்
15 .வ/வ/ 278 திரு. அருளம்பலம் சிவசுப்பிரமணியம்
16 .வ/வ/ 288 திரு. வீரவாகு வினாயகர்
17 .வ/வ/ 296 திரு. கந்தர் சண்முகம்
18 .வ/வ/ 302 திரு. பெருமையினார் லிங்கநாதன்
19 .வ/வ/ 307 திரு. வைரமுத்து செல்வராசா
20 .வ/வ/ 308 திரு. சங்கரப்பிள்ளை சிவபாதம்
21 .வ/வ/ 327 திரு. காசிப்பிள்ளை சோமசுந்தரம்
22 .வ/வ/ 360 திரு. முருகேசு பாலசிங்கம்
23 .வ/வ/ 366 திரு. முத்தையா வேலுப்பிள்ளை
24 .வ/வ/ 384 திரு. தம்பிராசா தவபாலன்
25 .வ/வ/ 385 திரு. முத்தையா புஸ்பநாதன்
26 .வ/வ/ 431 திரு. கனகசபை சிதம்பரப்பிள்ளை
27 .வ/வ/ 438 திரு. பரராசசிங்கம் சதாசிவம்
28 .வ/வ/ 450 திரு. சின்னத்தம்பி இரத்தினம்
29 .வ/வ/ 461 திரு. கணபதிப்பிள்ளை சின்னையா
30 .வ/வ/ 481 திரு. வீரவாகு செல்வராசா
31 .வ/வ/ 488 திரு. கணபதிப்பிள்ளை நடராசா
32 .வ/வ/ 497 திரு. செல்வராசா யோகராசா
33 .வ/வ/ 499 திரு. கந்தையா றொபீந்திரன்
34 .வ/வ/ 508 திரு. சின்னத்தம்பி கார்த்திகேசு
35 .வ/வ/ 511 திரு. கிருஸ்ணபிள்ளை சண்முகராசா
36 .வ/வ/ 544 திரு. அரசர் வேலுப்பிள்ளை
37 .வ/வ/ 579 திரு. கதிரேசு வீரசிங்கம்
38 .வ/வ/ 627 திரு. முத்துக்குமாரு கந்தவனம்
39 .வ/வ/ 658 திரு. பேரம்பலம் இராசரத்தினம்
40 .வ/வ/ 662 திரு. கைலாயபிள்ளை அமிர்தலிங்கம்
41 .வ/வ/ 708 திரு. கந்தையா நவரத்தினம்

## முல்லைத்தீவு உதவி அரச அதிபர் பிரிவு

1. மு/25 திரு. தம்பிமுத்து நடராசா
2. மு/26 திரு. வயிரவிப்பிள்ளை பச்சைமால்
3. மு/27 திரு. கந்தையா பாலச்சந்திரன்
4. மு/33 திருமதி. செல்லம்மா கந்தையா
5. மு/40 திரு. சூசை ஆரோக்கியநாதர்
6. மு/51 திருமதி. பரமேஸ்வரி சிவசுந்தரம்
7. மு/59 திரு. செல்லத்துரை தர்மராசா
8. மு/62 திரு. சின்னையா இராசசேகரம்
9. மு/67 திரு. இளையதம்பி ஜெயவீரசிங்கம்
10. மு/70 திரு. தாமோதரம்பிள்ளை நடராசா
11. மு/77 திரு. சின்னத்தம்பி பூபாலசிங்கம்
12. மு/82 திருமதி. நல்லபிள்ளை பொன்னையா
13. மு/167 திரு. சுப்பையா சிவபாலன்
14. மு/174 திருமதி. பத்தினி கந்தசாமி
15. மு/185 திருமதி. நாகம்மா சிவராஜா
16. மு/198 திரு. இராமசாமி சண்முகசுந்தரம்
17. மு/203 திரு. கனகன் குமாரலிங்கம்
18. மு/205 திருமதி. பத்மலோசனி நவரட்ணம்
19. மு/213 திருமதி. கமலாதேவி செல்லையா
20. மு/223 திரு. பொன்னம்பலம் சந்திரசேகரி
21. மு/264 திரு. செல்லையா முத்தையா
22. மு/311 திரு. கதிரவேலு தயாபரன்
23. மு/318 திரு. வைரமுத்து பாலசிங்கம்
24. மு/352 திரு. வேலுப்பிள்ளை சிவகுரு
25. மு/410 திரு. காசிப்பிள்ளை ஆனந்தராசா
26. மு/422 திரு. சண்முகம் வேலுப்பிள்ளை
27. மு/428 திருமதி. பொன்னம்மா இராசரத்தினம்
28. மு/431 திரு. ஆறுமுகம் புலேந்திரன்
29. மு/458 திரு. சின்னப்பு நடராஜா
30. மு/492 திரு. சோமசுந்தரம் தர்மலிங்கம்
31. மு/533 திரு. பர்ணாந்து சுவக்கீன்
32. மு/544 திருமதி. பற்றிமலர் அந்தோனிப்பிள்ளை
33. மு/556 திரு. வஸ்தியாம்பிள்ளை செல்லத்துரை(அப்பன்)
34. மு/585 திரு. நாகமணி நாகேந்திரன்
35. மு/586 திரு. இசிதோர் அன்ரன்ஜீவராசா
36. மு/592 திரு. மகாதேவா குணசிங்கராசா
37. மு/599 திரு. மத்தியாஸ் சின்னப்பு
38. மு/626 திரு. மிக்கல் அந்தோனிப்பிள்ளை
39. மு/642 திரு. கந்தையா பெரியதம்பி
40. மு/644 திரு. ஞானமுத்து செபமாலை
41. மு/664 திரு. சில்வெஸ்ரர் மனுவேற்பிள்ளை
42. மு/670 திரு. பொன்னையா குமாரவேலு
43. மு/678 திருமதி. திரேசம்மா இராயப்பு
44. மு/703 திரு. பற்றிக் பொன்கலன்
45. மு/736 திருமதி. செல்லமுத்து தியாகலிங்கம்
46. மு/818 திரு. இரத்தினசிங்கம் தவராசா
47. மு/843 திரு. சதாசிவம் சிவராமகிருஷ்ணன்
48. மு/855 திருமதி. சிவயோகம் இராசகுலசிங்கம்
49. மு/872 திருமதி. பிலோமினம்மா பர்ணபாஸ்
50. மு/922 திரு. வல்லிபுரம் கந்தையா
51. மு/927 திரு. கந்தையா சின்னத்தம்பி
52. மு/942 திருமதி. காந்தமலர் கிட்டினன்
53. மு/979 திரு. கதிரவேலு செல்லையா
54. மு/987 திரு. கதிர்காமு கந்தையா
55. மு/992 திரு. சரவணமுத்து பீதாம்பரம்
56. மு/1051 திரு. முருகுப்பிள்ளை முத்தையா
57. மு/1063 திரு. குமாரு அலேஸ் செல்வநாயகம்
58. மு/1082 திரு. வேலுப்பிள்ளை கந்தையா
59. மு/1095 திரு. இராசேந்திரம் இராயப்பு
60. மு/1142 திருமதி. சிவபாக்கியம் சதாசிவம்
61. மு/1143 திரு. கபிரியேல் மிக்கேல்ப்பிள்ளை
62. மு/1154 திரு. நமசிவாயம் இரத்தினசிங்கம்
63. மு/1171 திரு. இராயப்பு யேசுரெத்தினம்
64. மு/1223 திரு. கனகசப்பை நாகையா
65. மு/1238 திரு. வேலுப்பிள்ளை கனகசிங்கம்
66. மு/1244 திரு. இரத்தினம் கந்தையா
67. மு/1288 திரு. அருணாசலம் கறுப்பையா
68. மு/1302 திரு. சிவலிங்கம் நவரத்தினம்
69. மு/1308 திரு. ஸ்ரீநிவாசக சண்முகநாதக்குருக்கள்
70. மு/1360 திரு. செல்லப்பா கருணாகரன்
71. மு/1374 திரு. பிலிப்பு மத்தியாஸ்
72. மு/1406 திரு. இராயப்பு மனுவேற்பிள்ளை
73. மு/1410 திரு. கமலமுத்து முத்துராசா
74. மு/1415 திரு. பிலிப்பையா திருச்செல்வம்
75. மு/1424 திரு. வேலுப்பிள்ளை அருமைநாயகம்
76. மு/1439 திரு. பஞ்சாச்சரம் சிவஞானம்
77. மு/1443 திரு. வீரகத்தி வயிரமுத்து
78. மு/1450 திரு. பொன்னுத்துரை திருஞானசம்பந்தர்
79. மு/1470 திரு. மயில்வாகனம் இந்திரநாதன்
80. மு/1481 திரு. நடேசு செல்லத்தம்பி
81. மு/1507 திரு. வேலும்மயிலும் தங்கராசா
82. மு/1519 திரு. சுப்பையா இராசேந்திரம்

## மன்னார் உதவி அரச அதிபர் பிரிவு

1.ம/9 திரு. வைத்திலிங்கம் கணேசலிங்கம்
2.ம/13 திரு. நவரத்தினம் முருகானந்தராசா
3.ம/37 திருமதி. கிருஸ்ணதேவி சண்முகராஜா
4.ம/84 திரு. இராமலிங்கம் தியாகராஜா
5.ம/85 திரு. கந்தையா சிவராசா
6.ம/87 திரு. அருணாசலம் பொன்னுச்சாமி
7.ம/124 திரு. சின்னத்தம்பி துரைராசா
8.ம/135 திரு. கந்தப்பு வயிரமுத்து
9.ம/140 திரு. அவுரார் மரியாம்பிள்ளை
10.ம/ 145 திரு. சண்முகம் அமிர்தலிங்கம்
11.ம/ 156 திரு. அந்தோனிப்பிள்ளை பேரின்பநாயகம்சிறில்
12.ம/ 167 திரு. அகஸ்ரின் சந்தியோகு
13.ம/ 175 திரு. சவரிமுத்து றொபேட்
14.ம/ 180 திருமதி. சின்னாச்சி வேலாயுதபிள்ளை
15.ம/ 303 திரு. யாகப்பு ஞானசீலன்
16.ம/ 361 திரு. ஐயாத்துரை சண்முகவிக்கினராசா
17.ம/ 366 திரு. வயிரமுத்து வேலும்மயிலும்
18.ம/ 370 திரு. சபாபதி தம்பையா
19.ம/ 374 திரு. சுப்பிரமணியம் அருட்பிரகாசம்
20.ம/ 389 திரு. கனகசபை குகசிறி
21.ம/ 407 திரு. பரமு கந்தையா
22 .ம/442 திரு. அலசு அந்தோனிசுபபாக்கியம்
23.ம/ 481 திரு. மாக்கஸ் ஒஸ்ரின்பெர்னாண்டோ
24.ம/ 500 திரு. கனகரத்தினம் பஞ்சாட்சரம்
25 .ம/538 திருமதி. திரேசம்மாள் அருள்பிரகாசம்
26.ம/ 573 திரு. பிலிப்பு யக்கோவு
27.ம/ 588 திரு. தொம்மை பாக்கியநாதன்
28.ம/ 599 திரு. அந்திரேஸ் யேசுதாசன்
29.ம/ 611 திரு. யோசப் தர்மறட்ணம் கொடுதோர்
30.ம/ 651 திரு. சின்னத்துரை கனகேந்திரன்
31.ம/ 697 திருமதி. கலா நாகேந்திரம்
32.ம/ 706 திரு. சின்னையா தியாகராசா
33.ம/ 712 திரு. தம்பையா மோகன்
34.ம/ 715 திரு. கிறிஸ்ரியன் அன்ரனி
35.ம/ 726 திரு. கதிரவேலு கனகரத்தினம்
36.ம/ 742 திரு. பரமசாமி இராஜேஸ்வரன்
37.ம/ 746 திரு. தம்பிப்பிள்ளை சிவஞானம்
38.ம/ 753 திரு. மருசால்பிள்ளை ஆசப்பிள்ளை
39.ம/ 754 திருமதி. அக்கினேஸம்மா செபஸ்தியாம்பிள்ளை
40.ம/ 760 திரு. தம்பிப்பிள்ளை கருணாகரன்

(முற்றும்)

# கடற்படைத் தளபதியிடம் நட்டஈடு; எந்த அடிப்படையில் பெற்றுத்தருவது!

## பாதிக்கப்பட்ட குடும்பத்துக்கு பிரதமர் கடிதம்

வடமராட்சி கடற்பரப்பில் கடற்படையினரின் படகு மோதி உயிரிழந்தவருக்கு கடற்படைத் தளபதியிடம் இருந்து, எந்த அடிப்படையில் நட்டஈடு பெற்றுத்தரவேண்டும் என்பது குறித்து ஆலோசனை வழங்குமாறு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாதிக்கப்பட்ட குடும்பத்தினரிடம் கோரியுள்ளார்.

வடமராட்சி கடற்பரப்பில் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த வேளை, கடற்படையின் டோறா மோதியதில் ஜெயசிங்கம் என்பவர் உயிரிழந்தார்.

தனது கணவனை இழந்தமையால் நாளாந்த உணவுக்கே கஷ்டங்களை எதிர்நோக்கிவரும் ஜெயசிங்கத்தின் மனைவி, தமக்கு நட்டஈடு வழங்குமாறு பிரதமருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

தனது கணவனை இழந்தமையால், 5 பிள்ளைகளின் எதிர்காலம் பாதிப்படைந்துள்ளதாக உயிரிழந்தவரின் மனைவி சுட்டிக்காட்டியிருந்தார்.

கடற்படையினரின் டோறா மோதியதில் கணவன் உயிரிழந்ததால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு, கடற்படைத் தளபதியிடமிருந்து எந்த வகையான நட்டஈட்டைப் பெற்றுத் தருவது என்பது குறித்து தமக்கு அறிவிக்குமாறு கோரி கடிதம் ஒன்றைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அனுப்பிவைத்துள்ளார்.(31)

# இழுவை வலைத் தொழிலாளர்கள் மாற்றுத் தொழில் செய்ய ஏற்பாடு!

யாழ்ப்பாண மாவட்டத்தில் இழுவைவலைத் தொழில் இந்த ஆண்டுடன் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இழுவைவலைத் தொழிலில் ஈடுபட்ட 139 இயந்திரப் படகுகளுக்கும் மாற்றுத் தொழில் செய்வதற்குரிய வலைகளின் விபரம் குருநகர், வல்வெட்டித்துறை, தீவக கடற்றொழிலாளர் சங்கங்களிடம் சம்மேளனத்தால் கோரப்பட்டுள்ளது.

விபரங்கள் பரிசீலனை செய்யப்பட்டு மாற்றுத் தொழில் முழுமையாக இல்லாத படகு ஒன்றுக்கு ரூபா 275,000 மும், தொழிலுள்ள படகு ஒன்றுக்கு ரூபா 50,000 பெறுமதியான கடற்தொழில் உபகரணங்களும் பெற்றுக்கொடுக்க வேண்டியிருப்பதால் மொத்தம் 28.1 மில்லியன் ரூபா நிதியை அரச, அரசசார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அந்த உபகரணங்களை வாங்கிக் கொடுப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள விருப்பதாக, யாழ்.மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சமாசங்களின் சம்மேளனத் தலைவர் சி.தவரட்னம் தெரிவித்தார். (21)

# நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு ஆக்கப் போட்டிகளுக்கு ஏற்பாடு!

(உடுவில்)

சர்வதேச நல்லொழுக்க தினத்தை முன்னிட்டு போருட் சக்தி அமைப்பினரால் உடுவில், தெல்லிப்பழைக் கோட்ட பாடசாலை மாணவர்களிடையே கட்டுரை, பேச்சு, கவிதை, வரைதல் (சித்திரம்) போட்டிகள் நடாத்தப்படவுள்ளன.

பாலர்பிரிவு (தரம் 5, 6), கீழ்ப் பிரிவு (தரம் 7, 8), இடைநிலைப் பிரிவு (தரம் 9, 10), மேற்பிரிவு (தரம் 11, 12, 13) என்ற பிரிவுகளாக நடாத்தப்படும் போட்டிகளுக்கான தலைப்புகள், எழுத வேண்டிய சொற்களின் எண்ணிக்கை, பேச்சுக்கான நிமிடங்கள், சித்திரப் போட்டிக்கான வாசகம் என்பன பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களிடையே நல்லொழுக்கம், நன்மனப்பாங்கு, நல் வாழ்க்கை முறை போன்றவற்றை ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுத்தப்படும் இந்தப் போட்டிகளுக்கு, இந்த மாதம் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பங்களை அந்தந்தக் கோட்டங்களுக்கு அனுப்பி வைக்குமாறும், 28 ஆம் திகதி கோட்டப் பணிப்பாளரால் அறிவிக்கப்படும் இடங்களில் போட்டி நடைபெறும் எனவும், ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பாடசாலை மட்டத்தில் முதலிடம் பெறும் மாணவருக்கும், கோட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவருக்கும் சான்றிதழ்கள், பரிசில்கள் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

# யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

யாழ். தேர்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் நாளையும், நாளைமறுதினமும் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கக் கூடிய வகையில், ஒவ்வொரு பிரதேசசபைகளினதும் தேவைகளை- பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் க.இராசையா சகல பிரதேச சபை செயலாளர்களையும் கேட்டுள்ளார்.

நிதி ஒதுக்கீடு தொடர்பான முக்கிய பிரச்சினைகள், அவசர கட்டட புனரமைப்பு, புதிய கட்டட நிர்மாணிப்பு, அத்தியாவசியமாகத் தேவைப்படும் உபகரணங்கள், எதிர்நோக்கும் பிரச்சினைகள், எடுக்கவேண்டிய தீர்வுகள் ஆகியவற்றின் விபரங்களைக் கூட்டத்துக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைக்குமாறு பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அறிவித்துள்ளார். (91,29)

# சின்னஞ்சிறு செய்திகள்

## மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகளுக்கான கலந்துரையாடல்

மீன்பிடியியல் டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்திசெய்து வெளியேறிய மாணவர்களில், நடைபெற்று முடிந்த கடல் வளத் தொழில்நுட்ப ஆசிரியர் போட்டிப் பரீட்சைக்குத் தோற்றியுள்ள அனைவருக்குமான அவசர கலந்துரையாடல் - யாழ். பல்கலைக் கழக கடல்வள அபிவிருத்தி நிலைய விரிவுரை மண்டபத்தில் இன்று காலை 10 மணிகது நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நீர் உயிர்வள ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

## ஓட்டோ மோதியதில் கரவெட்டியில் மூவர் காயம்

(கரவெட்டி)

கரவெட்டி அத்துளு அம்மன் கோவில் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் மூன்று பேர் காயமடைந்தனர்.

ஓட்டோ ஒன்று மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்ற கரவெட்டி கிழக்கைச் சேர்ந்தவர்களான ஐ.தேவராஜா (வயது 48) அவரது மகள் அர்ச்சுனா (வயது 17) ஆட்டோ சாரதி ஜே.அருள்குமார் ஆகியோரே காயமடைந்தவர்களாவர். (14)

## கடல்வள ஆசிரியர்களுக்கு உதவித் தொகை வழங்கல்

கடல் உயிரின வளத் தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பித்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்களுக்கான உதவு தொகை, நாளை வெள்ளிக்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ். வலயக் கல்வி அலுவலகத்திலுள்ள யாழ். மாவட்டக் கல்வி மேம்பாட்டுப் பேரவைக் காரியாலயத்தில் வழங்கப்படும்.

## யாழ். பிரதேச செயலக நடமாடும் சேவை

யாழ் பிரதேச செயலர் பிரிவினால் ஈச்சமோட்டை, சுண்டுக்குளி தெற்கு, சுண்டுக்குளி வடக்கு, மருதடி ஆகிய கிராம சேவையாளர் பிரிவு மக்களுக்கு - பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை பெற்றுக் கொடுத்தல் சேவைகளுக்கான நடமாடும் சேவையொன்று, நாளை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய அடையாள அட்டை பிறப்புச்சான்றிதழ் இல்லாதவர்கள், ஆவணங்களுடன் சமூகமளித்து, இந்தச் செயன்முறையின் உச்சப் பயன்பாட்டைப் பெற்றுக்கௌ்ளுமாறும், ஆவணங்கள் இல்லாதவர்களுக்கு அவற்றைப் பெற்றுக் கொடுக்க மாற்று ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் தெரிவித்தார்.

## கும்பாபிஷேகம்

மல்லாகம் கொந்திராவத்தை ஸ்ரீ ஞான வைரவர் கோவிலில் கண்டாமணி பிரதிஷ்டையும், அஷ்டோத்தர கலச கும்பாபிஷேகமும் இன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கான ஆரம்பக் கிரியைகள் முதல்நாள் மாலை ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (101)

## திலீபன் நினைவுதினத்தை முன்னிட்டு சிரமதானப் பணிகள்

வலிகாமம் தென்மேற்கு தேசிய எழுச்சிப் பேரவையினர் - தியாக தீபம் லெப்ரினனன்ட் கேணல் திலீபனது 17 ஆவது ஆண்டு நினைவு நாட்களை முன்னிட்டு இன்றுமுதல் தொடர்ச்சியாக சிரமதானப் பணிகளை மேற்கொள்ளவுள்ளனர்.

நவாலி சங்கயன் வெள்ள வாய்க் கால், பிப்பிலி மயானம், சாவற்கட்டுச் சந்தை வீதி ஆகியன முதல்கட்டமாக சிரமதான மூலமாகத் துப்பரவு செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மானிப்பாய் பிரதேசசபை தொழில்நுட்ப அலுவலர்களுடன் எழுச்சிப் பேரவையினர் இணைந்து இந்தப் பணிகளை மேற்கொள்ளவுள்ளதாக எழுச்சிப் பேரவைச் செயலாளர் ப.சசிதரன் தெரிவித்தார். (91)





நல்லூர் ஆலய சுற்றாடலில் நடைபெற்ற கொமர்ஷல் வங்கியின் 'உதார' மூத்தோர் கணக்கு அறிமுகவிழாவில் சந்தைப்படுத்தல் பிரிவு பிரதம முகாமையாளர் றிச்சட் றொட்றிக்கோ - ஒருவருக்கு பரிசு வழங்குவதையும், கொமர்ஷல் வங்கியின் ஊழியர்களையும் படத்தில் காணலாம்.

# கல்வித்துறை போன்று கணினித் துறையிலும் சாதனைகளைப் படைக்க வேண்டும்!

## கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண் மாஸ்ரர்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு பாடசாலைகளில் பௌதீக வளங்கள் முற்றாகப் பூர்த்தி செய்யப்படவில்லை. அரசாங்கமோ, அரசசார்பற்ற நிறுவனங்களோ இந்தத் தேவையை முற்றாகப் பூர்த்தி செய்யமுடியாது. வெளிநாடுகளில் வாழும் இந்தப் பிரதேச மக்கள், பாடசாலை பழைய மாணவர்கள், நலன் விரும்பிகள் மூலமே இந்த வளங்களைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த வகையில் இந்த வித்தியாலயத்தின் பழைய மாணவர்களின் அனுசரணையுடன் இந்தக் கணினித் தொகுதி அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிக்கு தமிழீழ கல்விக்கழகம் மற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாக ச.செல்லையா குடும்பத்தினருக்கு தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் பாராட்டு தெரிவித்தார்.

பிரான்ஸ் நாட்டில் வாழும் யா/உடுத்துறை மகாவித்தியாலய பழைய மாணவர்களின் அனுசரணையுடன் 'பிரான்ஸ் கிறீஸ்றல் சென்றல்' மாணவர் அமைப்பினால் யா/உடுத்துறை மகாவித்தியாலயத்துக்கு 5 கணினிகள் கையளிப்பு நிகழ்வு மற்றும் கணனி நிலையத் திறப்பு விழா வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றியபோதே தமிழீழ கல்விக் கழகத் துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்டர் இவ்வாறு கூறினார்.

வித்தியாலய அதிபர் அ.சா. அரியகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்-

இந்தப் பிரதேச மாணவர்கள் பாடசாலை கல்வி முடிந்து, கணனிப் பயிற்சிநெறி பயில்வதற்குப் பெரும் தொகைப் பணம் விரயம் செய்து - நகரங்கள், பட்டினங்கள் நாடிச்செல்லவேண்டிய நிலை இருந்தது. இப்போது இந்த நிலைமாறி தத்தமது கிராமத்திலேயே கணினிப் பயிற்சி பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்தக் கணினிக் கல்வியறிவை பாடசாலைகள் மட்டுமல்லாது கிராமங்களும் பயன்பெற வேண்டும்.

கடந்த காலங்களில் ஆசிரியர்கள், தளபாடங்கள் பற்றாக்குறை இருந்தது. அந்த வேளையில் 60 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் இருந்தார். இப்போது 24 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் நியமிக்கப்பட்டதன்மூலம் ஆசிரியர் பற்றாக்குறை முற்றாக நீங்கியுள்ளது.

அதிபர், ஆசிரியர்களின் அளப்பரிய பணியின் மூலம் இந்தப் பிரதேசத்திலிருந்து இடம்பெயர்ந்த மாணவர்கள் அந்தப் பிரதேசங்களில் கல்வியில் பல சாதனைகள் படைத்துள்ளார்கள். அதுபோல் கணினித்துறையிலும் பல சாதனைகள் படைக்கவேண்டும் எனவும் அவர் கூறினார்.

இந்த விழாவின் ஆரம்பத்தில் மங்கள விளக்கை - ஆழியவளை தியாகதீபம் திலீபன் மருத்துவமனைப் பொறுப்பதிகாரி டொக்டர் ஈழவாணி மற்றும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் ஏற்றினர். தமிழீழத் தேசியக் கொடியை - வடமராட்சி கிழக்குக் கடற்புலிகளின் அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் புகழேந்தி ஏற்றிவைக்க கணனி நிலையத்தை கடற்புலிகளின் தளபதி லெப்.கேணல் மங்களேஸ் நாடா வெட்டித் திறந்து வைத்தார். கணனி இயந்திரங்களைப் பழைய மாணவன் ச.செல்லையா, வடமராட்சி பிரதேச கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினத்திடம் கையளித்தார்.

வடமராட்சி பிரதேச கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம், தமிழீழ கல்விக் கழக துணைப் பொறுப்பாளர் அருண்மாஸ்டர், வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் எஸ்.ஜெயசீலன், து.கி. தாயகன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். (21)

# பாடசாலை செயற்பாடுகளை அவதானிக்க வலயக்கல்விப் பணிப்பாளர்கள் விஜயம்

வலிகாமம் வலயப் பாடசாலைகளின் செயற்பாடுகளை அவதானித்து, ஆலோசனைகள் தெரிவித்து, வழிநடத்தும் நோக்கில் வலயக் கல்விப் பணிப்பாளர் தலைமையிலான குழுவினர் பாடசாலைகளுக்குத் திடீர் விஜயங்களை நேற்று முதல் மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் சுத்தம், மலசலகூடப் பாவனை, பாடசாலை அபிவிருத்திச் செயற்பாடு, க.பொ.த (உ/த), (சா/த) மாணவர்களது அனுமதிப் பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகளின் நடைமுறை, ஆசிரியர்கள் உரிய நேரத்துக்குப் பாடசாலைக்கு வருதல் தொடர்பான விடயங்கள் அவதானிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வலிகாமம் வலய, கோட்டப் பணிப்பாளர்கள் வந்து மேற்பார்வை நடவடிக்கைகளை மேற்கொள்வதாக உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்தார். (91)



# பொருண்மியம்

# கதலி வாழையைப் பாதிக்கும் வைரஸ் நோய்கள்

கதலி வாழைமரத்தைப் பாதிக்கக் கூடிய மூன்று விதமான வைரஸ் நோய்கள் காணப்படுகின்றன. அவையாவன -

1. **வாழை இலைத்தண்டில் ஏற்படும் வைரஸ் நோய்.**
2. **வாழைத் தண்டு அழுகுதல் நோய்.**
3. **வாழை இலைகளில் புள்ளி விழும் நோய்.**

**வாழை இலைத்தண்டில் ஏற்படும் வைரஸ் நோய்.**

இந்த நோய் வாழை இலைத்தண்டில் ஏற்பட்டால் தடுக்க முடியாது. எனவே, பரவாமல் தடுப்பது அவசியம். அதற்கான அறிகுறிகள் - இலைகளில் மஞ்சள் நிறமான கோடுகள் உருவாகி, பின்னர் கறுப்புக் கோடுகளாக மாறும். இலைகள் சுருங்கி சிறிதாகிப் பின்னர் வாடிப்போகும்.

இலைகளின் தண்டுகளில் கோடுகள் ஏற்படும். இலைகளின் அடி வெடிக்கும், தண்டில் மஞ்சள் நிறமான புள்ளி விழும். தண்டு வெடிக்கும்.

வாழைப்பழங்கள் சிறிதாகும், வாழைப்பூவில் மஞ்சள் நிறமான கோடுகள் ஏற்படும். வாழைப்பழங்கள் பழுதடைந்து காணப்படும்.

இந்த நோய் ஏற்பட்ட வாழைக் கன்றுகளை நடுவதால், நோய் பரவ ஏதுவாகும் மா மூட்டைப்பூச்சியே இந்த நோயை ஏற்படுத்துகின்றது.

**நோயைத் தடுத்தல்**

நோயின் ஆரம்பத்திலேயே இனங்கண்ட வாழைக்கன்றை, வாழை மரங்களைப் பிடுங்கிவிட வேண்டும்.

**வாழைத் தண்டு அழுகுதல் நோய்**

இந்த நோயின் தாக்கத்தால், வாழைத் தண்டு அழுகும். வாழை இலைகள் அழுகி, மடிந்து விழும்.

இதற்கான அறிகுறிகள் - மரம் மஞ்சள் நிறமாக மாறுதல், வளர்ச்சி குறைவடைதல் போன்றவைகள் ஏற்படும்.

**நோயைத் தடுத்தல்**

காற்றில் ஈரத்தன்மை அதிகமுள்ள காலங்களில் இந்த நோய் அதிகமாகப் பரவுகின்றது. நோய் ஏற்பட்ட பகுதிகளை வெட்டி நீக்கி விடவேண்டும். பல இடங்களில் அழுகி இருந்தால், மரத்தைப் பிடுங்கி விடவேண்டும். மேலும் இந்த நோய் ஏற்பட்ட மரங்களை வெட்டப் பயன்படுத்தும் கத்தியை - நோய் பாதிக்காத மரங்களை வெட்டப் பயன்படுத்தும் பொழுது அவற்றுக்கும் பரவ வாய்ப்புண்டு.

ஒரு மரத்தை வெட்டிய பின்னர், அடுத்த மரத்தை வெட்ட முன்னர் கத்தியை கிருமி நாசினி மூலம் தொற்று நீக்க வேண்டும். இந்த நோய் ஏற்பட்ட வாழைமரங்களுக்குப் பாய்ச்சப்படும் நீர் ஆரோக்கியமான மரங்களுக்குப் போவதன் மூலமும் நோய்த் தொற்றல் ஏற்படலாம்.

**வாழை இலைகளில் புள்ளி விழும் நோய்**

இது ஒருவகை பங்கஸினால் ஏற்படுகிறது. மஞ்சள் அல்லது கறுப்பு நிறமான புள்ளிகள் இலைகளில் காணப்படும்.

பிஞ்சு இலைகள் உருவாகிய பின்னர், எந்தச் சந்தர்ப்பத்திலும் இந்த நோய் ஏற்படலாம்.



நோயைத் தடுத்தல். நோய்தாக்கிய இலைகளை வெட்டி நீக்கி விடவேண்டும்.

வாழைகளை நடும்போது ஒன்றுக்கொன்று முட்டாமல் இடைவெளி இருக்குமாறு நட வேண்டும். நோய் அதிகமாகப் பரவி இருந்தால, கிருமிநாசினியைப் பயன்படுத்தலாம்.

**சசி சந்திரகாசன்**

# போஷாக்கு உணவுகளை மனிதனுக்கு வழங்கும் கடல்



இயற்கை வளங்களுள் கடல் வளமும் ஒன்றாகும். இது நிலத்துக்கு ஈரலிப்புத் தன்மையை அளிப்பதோடு, போக்குவரத்து வசதிகளுக்கும் உதவி புரிகின்ற அதே நேரம் - மனித இனத்துக்கு உணவு அளிக்கின்ற வயல்களாகவும் இருக்கின்றன.

பூமியின் மேற்பரப்பில் 3/4 பங்கு நீர்ப் பரப்பாக இருக்கின்றது. அதனால், உலகின் பிரதானமான பல தொழில்களில் மீன்பிடித் தொழில் வருவாயைக் கொடுக்கின்ற ஒரு தொழிலாகவுள்ளது. மக்களின் உணவுப் பொருட்களில் மீன் முக்கியமான உணவுப்பொருளாக விளங்கி வருகின்றது.

மீன் பிடித்தல் சிறப்பாக நடைபெறுவதற்குச் சில சாதகமான காரணிகள் தேவையாகவுள்ளன. இந்த சாதகமான காரணிகளைப் பொறுத்தே - ஒரு பிரதேசத்தின் மீன்பிடித் தொழிலின் விருத்தி அமைந்து காணப்படுகின்றது.

ஆழமற்ற கடல்களே மீன்பிடித்தலுக்குப் பெரிதும் உகந்தன. 200 மீற்றர் ஆழமான சமுத்திரப்பாகங்கள் - மீன்பிடித்தலுக்குப் பெரிதும் உகந்தன. அதாவது, கடலடித்தள மேடைகள் சிறந்த மீன்பிடி இடங்களாக உள்ளன.

ஆழமற்ற கடல்களிலே - மீன்களின் சிறந்த உணவாகிய 'பிளாங்ரன்' என்னும் நுண்ணிய மிதக்கும் உயிர்த் துணிக்கைகள் காணப்படுகின்றன.

மேலும் மீன்களின் இனப் பெருக்கத்துக்கும் ஆழமற்ற பரந்த கடல்கள் ஏற்றன. அதனாலேயே இந்தப் பகுதிகளில் மீன்கள் பெருந்தொகையாக வாழ்கின்றன.

நீரின் வெப்பநிலை, உவர்த்தன்மை, நீரோட்டங்கள் என்பனவும் மீன்பிடி இடங்களை நிர்ணயிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்றன.

குறிப்பிட்ட வெப்பநிலையிலும், குறிப்பிட்ட உவர்த்தன்மையிலும் சிலவகை மீன்கள் அதிகமாக வாழ்கின்றன. தன்மையில் வேறுபட்ட இரு நீரோட்டங்கள் ஒன்றையொன்று சந்திக்கின்ற பிரதேசங்களும் சிறந்த மீன்பிடி இடங்களாக உள்ளன.

மீன்பிடித்தொழில் சிறப்பாக நடைபெறுவதற்குப் பல்லுருவக் கடற்கரை யோரங்கள் அதாவது குடாக்கள், நுழைகழிகள் மிகவும் ஏற்றன.

விதைக்காமலேயே பயன்பெறும் மீன்பிடிக் கைத்தொழில் விருத்திக்கு, எமது பிரதேசக் கடல் சாதகமாகக் காணப்படுகின்றது. இதற்குக் காரணம் கண்டமேடை அமைந்திருப்பதேயாகும்.

கண்டமேடைகள் - ஆழ்கடல் அடித் தளங்கள் போலன்றி, சூரிய வெப்பத்தைப் பெறுவதால், மீன்கள் வாழ்வதற்கேற்ற 'பிளாங்ரன்' போன்ற உணவுகளைக் கொண்டனவாகவுள்ளன.

மேலும் இனப்பெருக்கத்துக்கேற்ப வெப்பத்தையும், மறைந்து வாழ்வதற்கேற்ற ஒதுக்கிடங்களையும் இவை கொண்டிருக்கின்றன.

கண்டமேடையின் அடித்தளத்தில் தீவுகள் போன்று நீருள் அமைந்த கடலடித்தள மேடைகள் சிறந்த மீன்பிடித் தளங்களாகும். ஆழம் குறைந்த இவை, மீன்கள் வாழ்வதற்கேற்ற தன்மைகளை அளிப்பனவாக விளங்குகின்றன.

கடற்தாவரங்கள் இந்தக் கடலடித்தள மேடைகளில் வளர்ந்து மீன்களுக்கு உணவையும், உறைவிடத்தையும் தருகின்றன.

இத்தகைய கடலடித்தள மேடைகள் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வடகிழக்கே இந்தியாவின் கோடிக்கரை முனைவரை பரந்துள்ள பீற்று கடலடித்தளமேடை - 2500 சதுர கிலோ மீற்றர் பரந்த, சிறந்த மீன்பிடித்தளமாகும்.

கற்பிட்டி தொடக்கம் மன்னார், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, முல்லைத்தீவு என்பனவற்றை உள்ளடக்கித் திருகோணமலை வரையுள்ள பகுதிகளில், அதிக அளவில் மீன்கள் பிடிக்கப்பட்டு வருகின்றன.

சுறா வகைகள், பருமனில் குறைந்த மீன் வகைகள், இறால், கணவாய், நண்டு வகைகளும், ஆமை, கடல்பன்றி, கடலட்டை போன்றவைகள் பிடிக்கப்படுகிறது. இவை அயன மண்டலத்துக்குரிய மீன் வகைகளாகும்.

# குடாநாட்டு சந்தை நிலவரம்

| பொருட்கள் | நெல்லியடி | சாவகச்சேரி | பருத்தித்துறை | யாழ்ப்பாணம் | சுன்னாகம் | மருதனாமடம் | திருநெல்வேலி | சங்கானை |
|---|---|---|---|---|---|---|---|---|
| பயிற்றங்காய் | 40/= | 30/= | 40/= | 50/= | 40/= | 30/= | 30/= | 35/= |
| வெண்டிக்காய் | 25/= | 30/= | 35/= | 30/= | 15/= | 20/= | 20/= | 20/= |
| உருளைக்கிழங்கு | 70/= | 30/= | 75/= | 65/= | 65/= | 90/= | 65/= | 70/= |
| கத்தரிக்காய் | 40/= | 30/= | 35/= | 60/= | 40/= | 50/= | 50/= | 60/= |
| பாகற்காய் | 30/= | 40/= | 30/= | 60/= | 60/= | 60/= | 40/= | 65/= |
| கரட் | 40/= | 60/= | 50/= | 40/= | 40/= | 40/= | 50/= | 45/= |
| பீற்றூட் | 25/= | 20/= | 30/= | 20/= | 20/= | 20/= | 20/= | 25/= |
| முருங்கைக்காய் | 70/= | 80/= | 60/= | 100/= | 80/= | 80/= | 90/= | 60/= |
| வெங்காயம் | 50/= | 40/= | 40/= | 30/= | 40/= | 40/= | 40/= | 30/= |
| பச்சை மிளகாய் | 60/= | 60/= | 40/= | 50/= | 40/= | 40/= | 40/= | 45/= |

# மிளகாய்ச் செய்கை

வெவ்வேறு காலநிலை பிரதேசங்களில் மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டாலும், குறிப்பாக பச்சை மிளகாய் - ஈரவலய பிரதேசங்களில் உற்பத்தி செய்யப்படு



கிறது. ஒரு கிலோகிராம் செத்தல் மிளகாயை உற்பத்தி செய்வதற்காக நன்றாக பழுத்த சிவப்பு நிறம் கொண்ட 3-4 கிலோகிராம் மிளகாய் தேவைப்படும். காயவைத்து எடுக்கப்பட்ட மிளகாய்களை மீண்டும் ஒரு மாதத்துக்குப் பின்னர் மீண்டும் காய வைத்து, நன்றாக களஞ்சியப்படுத்தி வைத்துக் கொள்ளவேண்டும்.

**காலநிலை**

கடல் மட்டத்திலிருந்து 1600 மீற்றர் உயரமான பிரதேசம் இந்தப் பயிருக்கு உகந்தது. சூரியஒளி கிடைக்கக்கூடிய வெப்பமான காலநிலை தேவைப்படும். இந்தப் பயிருக்கு $21^{0}C$ - $27^{0}C$ வரையான வெப்பம் தேவைப்படும். வருடாந்த மழை 600 மீற்றர் - 1000 மீற்றர் வரையுள்ள பிரதேசம் இந்தச் செய்கைக்கு சிறப்பானது.

**வகைகள்**

1) **ML - 1**

இந்தச் செடி 75-100 சென்ரிமீற்றர் வரை வளரும். கிளைகள் குறைவு. மிளகாய் ஒன்றின் நீளம் 4-13 சென்ரிமீற்றர் வரையில் இருக்கும். ஒருசெடி 6-7 மாதங்கள் வரை விளைச்சலைத் தரக்கூடியது.

2) **ML - 2**

இந்தச் செடி 50-75 சென்ரிமீற்றர் வரை வளரும். சிவந்த மண்ணில் சிறப்பாக வளரக்கூடியது. கிளைகள் பல காணப் வளரக்கூடியது. கிளைகள் பல காணப்படும். கிளைகள் காணப்படுவதால், விளைச்சலைப் பெறுவது மிகச் சுலபம்.

மிளகாய் ஒன்றின் நீளம் 5-9 சென்ரிமீற்றர் வரையில் இருக்கும். ஒரு செடி 5-6 மாதங்கள் வரை பயன்தரக்கூடியது.

3) **K.A - 2**

இந்த வகையானது ML -2 இற்கு ஒத்த வகையானது. அதிகம் வரண்டகால நிலைக்கும் ஏற்ற செடி இது. நீர்த்தட்டுப்பாடு ஏற்படினும், பராமரிப்பு குறைவாக இருப்பினும் நல்ல விளைச்சலைத் தரக்கூடியது. ஒரு மிளகாயின் நீளம் 7-10 சென்ரிமீற்றர் வரையில் இருக்கும். இந்த வகை மிளகாய் காரமானது. நல்ல சந்தை வாய்ப்புள்ளது. இந்தச் செடி 6 மாதகாலத்துக்கு விளைச்சல்களைத் தரும்.

**உற்பத்திக் காலம்**

மழைநீரை உபயோகித்து, பெரும் போகத்தில் புரட்டாதி மாதம் அல்லது ஐபசி மாதத்தில் மிளகாய் கன்றுகளை முளைக்க வைக்கலாம் அல்லது சித்திரை இறுதியிலோ வைகாசி மாதம் ஆரம்பத்திலோ மிளகாய்க் கன்றுகளை முளைக்க வைக்கலாம்.

**நிலத்தைப் பண்படுத்தல்**

பயிரிடும் நிலத்தை 8-10 அடி ஆழத்துக்கு வெட்டி, பின்பு மண்கட்டிகளை உடைத்துக் கொள்ளவேண்டும். செடிகளை முளைக்க வைக்கும் இடைவெளிகளின் அளவு.

| | | |
|---|---|---|
| ml - 1 | 60x60 | சென்ரிமீற்றர் |
| | 75x45 | சென்ரிமீற்றர் |
| ml - 2 | 45x30 | சென்ரிமீற்றர் |
| | 60x45 | சென்ரிமீற்றர் |
| | 60x60 | சென்ரிமீற்றர் |
| K.A 2 | 60x60 | சென்ரிமீற்றர் |

**களைகளை நீக்குதல்**

மண்வெட்டி உபயோகித்து களைகளை நீக்குவது சிறந்த பலனைத் தரும். கன்றுகளை முளைக்க வைத்து 2,4,7 அல்லது 10 வாரங்களில் களைகளை நீக்குவது மிக முக்கியம்.

**கிருமிநாசினி உபயோகித்து பின்வரும் முறையில் களைகளை நீக்கலாம்.**

1. எலக்வோர் - ஒரு ஏக்கருக்கு 1200-2000 மில்லிலீற்றர் பாவிக்கலாம்.
2. நாப்புறோமயிட் - ஒரு ஏக்கருக்கு 1000-1600 கிராம் வரை உபயோகிக்கலாம்.

**இரசாயன தடுத்தல்களின் போது கவனிக்கவேண்டிய விடயங்கள்**

1. கன்றுகளை முளைக்க வைத்து இரண்டு நாட்களின் பின்னர் பாவிக்க வேண்டும்.
2. மண்ணில் ஈரத்தன்மை இருக்க வேண்டும்.
3. ஒருமாத காலத்துக்கு தடுக்க முடியும்.
4. பின்பு மண்வெட்டியால் களைகளை அகற்றிவிடலாம். (தொடரும்...)

# தொழில்மலர்

## உற்பத்தித்திறன் உத்திகளுள் ஒன்றாக பின்பற்றப்படும் ஐவிதி

ஜப்பானிய ஐவிதி என்பது அலுவலகங்கள், உற்பத்தி நிலையங்களை சிறந்த முறையில் பராமரிப்பதற்கான ஒரு முகாமை முறையாகும்.

இந்த விதிகள் பின்வருமாறு -

- இன்று உலகம் முழுவதும் பல்வேறு நிறுவனங்களில், புரட்சிகரமான மாற்றத்தை விளைவிக்கும் ஒரு முகாமை உத்தி முறையாக இது கைக்கொள்ளப்படுகின்றது.
- உற்பத்தி மற்றும் சேவை புரியும் நிறுவனங்களை ஒழுங்குமுறையாக வைத்திருப்பதற்கும் இது விஞ்ஞானரீதியில் உதவுகிறது.
- விளங்கிக்கொள்வதற்கு இலகுவாகவும், செய்வதற்கு இலகுவாகவும், தொடர்ந்து இடம்பெறச் செய்ய இலகுவாகவும் உள்ளது.

**ஐவிதியின் முக்கியத்துவம்**

- உயர் உற்பத்தி
- உயர்ந்த தரம்
- செலவினங்களைக் குறைத்தல்
- உரியநேரத்தில் விநியோகம்
- பணியாளர்களுக்கு உள்ளுணர்வையும், நல்ல அபிப்பிராயத்தையும் வளர்த்தல்.

**ஐவிதியால் ஏற்படும் நன்மைகள்**

➤ நிறுவனத்தின் உள்ளும், புறமும் மாற்றம்.

➤ பண்டங்கள், சேவைகளின் தரம் விருத்தி.

➤ பாதுகாப்பு விருத்தி.

➤ உள்ளுணர்வில் மாற்றம்.

➤ பாவனையாளர்களைத் திருப்திப்படுத்தல்.

➤ இயந்திரங்களின் திருத்தம், புதுப்பித்தல் குறைவடைதல்.

➤ சேதாரங்கள் குறைவு.

➤ வேலை செய்யும் இடத்தை உச்ச அளவிலும், அழகாகவும் வைத்திருத்தல்.

➤ தேவையற்ற பொருட்களை இருப்பில் வைத்திருப்பதைத் தவிர்த்தல்.

➤ மூலப் பொருட்களை சிறந்த முறையில் பாவித்தல்.

➤ விபத்துக்களைத் தடுத்தல்.

➤ தரமான உற்பத்தியையும், செயற்திறனையும் உறுதிப்படுத்தல் போன்ற நன்மைகள் ஏற்படுகின்றன.

**இந்த ஐவிதி உள்ளடக்கும் ஜப்பானிய சொற்களாவன -**

1. செய்ரி - (தேவையற்றவற்றை நீக்குதல்).
2. செய்ரோன் - (ஒரு பொருளை ஒரு இடத்தில் வைத்துப் பாவித்தல்).
3. செய்சோ - (துப்பரவாக்குதல்).
4. செய்கெற்சு - (தரப்படுத்தி வைத்தல்).
5. செய்சுகி - (பயிற்சி).

இவற்றை விரிவாகப் பார்ப்போம்.

**செய்ரி - தேவையற்றவற்றை நீக்குதல்.**

கோவை, படிவம் போன்றவற்றிலுள்ள தேவையற்றவற்றை நீக்குதல். ஒரு பொருளை என்ன ஒழுங்கில் வைக்க வேண்டுமென்பதைத் தீர்மானித்தல்.

தேவையற்ற பொருட்களைச் சேகரித்து வைக்கும் முறையை குறைத்தல் அல்லது அவற்றுக்கு அதிக மதிப்பைக் கொடுக்காதிருத்தல்.

தேவையற்றவற்றை நீக்குதல் தொடர்பில் பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

✻ மிகத் தேவையான பொருட்கள்.

✻ முற்றாகத் தேவையற்ற பொருட்கள்.

✻ சில சந்தர்ப்பங்களில் தேவைப்படும் பொருட்கள் என்ற முறையில் பிரித்துக்கொள்ளுங்கள்.

மிகத் தேவையான பொருட்களை அருகில் எட்டக்கூடிய முறையில் வைத்துக்கொள்ளுங்கள். இடையிடையே தேவைப்படக்கூடியவற்றை சிறிது தூரத்திலோ, களஞ்சியத்திலோ போட்டு வையுங்கள். தேவையில்லை என்றால் அப்புறப்படுத்தி விடுங்கள்.

**செய்ரோன் - ஒரு பொருளை ஒரே இடத்தில் வைத்துப் பாவித்தல்.**

பேனை, பென்சில், திறப்பு, புத்தகங்கள், கோவைகள் என்பவற்றை உரிய இடங்களில் வைத்திருத்தல்.

இயந்திரங்களைத் திருத்துவோர் சாவிகளை, கழற்றிய உறுப்புகளைச் சீராக வைத்திருத்தல்.

இதன் பொருட்டு பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றலாம்.



❒ சகல அலுவலக அறைகளுக்கும், கட்டடங்களுக்கும் இலக்க மிடவும்.

❒ சகல இடங்களிலும் காற்றோட்டம், வெளிச்சம் போன்றவற்றை உறுதிப்படுத்தவும்.

❒ பொதுமக்கள், பணியாளர்கள்விளங் கிக்கொள்ளக் கூடிய முறை யில் அறிவித்தல்களை வைக்கவும்.

❒ அலுமாரிகளில், பீரோக்களிலுள்ள பொருட்கள் அடங்கிய பட்டியல்களை, கட்புலனாகும் இடத்தில் வைக்கவும்.

❒ மின்குமிழ், மின்விசிறிகள், கருவிகளுக்கு அடையாள இலக்கமிட்டு, வர்ண அடையாள முறைகளைப் பயன்படுத்தவும்.

**செய்சோ - துப்பரவாக்குதல்**

தூசிபடாது பாதுகாத்தல், எண்ணெயிடுதல், கழரும் நட்டுக்களைப் பூட்டுதல், கூட்டுதல், துடைத்தலுக்கு பின்வரும் நடைமுறைகளைப் பின்பற்றலாம்.

❒ மேசை, தொலைபேசி, அலுமாரி என்பவற்றைத் துப்பரவு செய்யுங்கள்.

❒ துப்பரவாக்குதல் ஒழுங்கான முறையில் இடம்பெற வேண்டும்.

❒ எல்லா இடங்களும் பாவிக்கக் கூடிய முறையில் இருப்பதை உறுதிப்படுத்துங்கள். இந்த நேரத்தில் நீங்களும் எழுந்து துப்பரவு செய்தலை உறுதிப்படுத்துங்கள்.

❒ உயர் மட்டத்திலுள்ளவர்கள் இந்தத் துப்பரவு செய்யும் முறைக்கு எடுத்துக்காட்டாக இருத்தல் வேண்டும்.

❒ இதற்காக ஒரு நாளில் 3-5 நிமிடங்கள் துப்பரவு செய்யும் நேரமாக ஒதுக்குங்கள்.

**செய் கெற்சு - தரப்படுத்தி வைத்தல்.**

எவ்வளவு தூரம், எவ்வளவு நேரம், எவ்வளவு செலவு, தொழிற்திறன், வெளியீட்டுத் திறன் என்பவற்றைப் பேணுதல்.

ஒவ்வொரு நடவடிக்கையையும் தரநிர்ணய நடைமுறைகளுக்கு அமைவாக இருப்பதை உறுதிப்படுத்தவும். சுயமதிப்பீட்டு முறையை ஊக்குவிக்கவும்.

**செய்சுகி - பயிற்சி**

மேற்குறித்த 4 விதிமுறைகளைப் பேணும் முறை பற்றி பயிற்சி அளித்தலும், அவை தொடர்ந்து இடம் பெறுதலை உறுதிப்படுத்தலும் இதுவாகும்.

இந்த ஐவிதியின் முதலாவது செயற்பாடான - தேவையற்றவற்றை அகற்றி விடுதல் என்பதைப் பற்றி சற்று விரிவாகப் பார்ப்போம்.

❒ உங்களிடமுள்ள தினக்குறிபபு மேசை, அலுமாரி, என்பவற்றைப் பாருங்கள். இப்போது தேவையற்ற கடதாசிகள், குறிப்புக்களை நீக்கி விடுங்கள். இதற்கு 5 நிமிடங்கள் போதும். இதனால், உங்கள் வேலைநேரம் கணிசமாகக் குறைவடைவதையும், வேலை இலகுவாக இருப்பதையும் உணர்வீர்கள்.

❒ உங்கள் அலுவலகக் கோவையைப் பாருங்கள் எத்தனை கோவைகள் தேவையற்றனவாக இருக்கும். ஒரு விடயத்திற்காக பல கோவைகளை நீங்கள் கூடுதலாக வைத்திருப்பீர்கள். இதனால் உரிய கோவைகளைத் தேடுவதில் பல பிரச்சினைகளை எதிர்நோக்குவீர்கள். கோவைகள் தேவையற்ற முறையில் கூடுவதால், இடநெருக்கடியுடன் பாவனைக்குள்ளாகாது தூசி படிதலும் நிகழ்கிறது.

எனவே, அவசியமான பழைய கோவைகளாயின் களஞ்சிய அறைக்கு அனுப்பி விடுங்கள்.

❒ இவ்வாறே உங்கள் அலுவலகத்தை அவதானியுங்கள். தேவையற்றவற்றை அகற்றி விடுங்கள். இவற்றைச் செய்வதற்கு உங்களுக்கு நீண்டநாட்கள் தேவைப்படாது. இதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணமே போதும். இதை நீங்கள் தனித்துச் செய்யமுடியாது. இதற்கு நீங்கள் ஒருநாளையோ, அரை நாளையோ ஒதுக்கிக் கொள்ளுங்கள். இந்த நாளில் நிறுவனத்திலுள்ள சகல ஊழியர்களையும் ஒன்று சேர்த்து இந்தப் பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என, உங்கள் ஊழியர்களிடமே ஆலோசனை கேளுங்கள். இதற்காக பெருந்தொகை நிறுவனப பணத்தை நீங்கள் செலவழிக்க வேண்டியதில்லை.

இந்தக் கூட்டத்தின் ஆரம்பத்தில் ஐவிதி எனறால் என்ன? இதன் பலாபலன்கள் என்ன? என்பதை சுட்டிக்காட்டுங்கள். உங்கள் நிறுவன ஊழியர்களுடன் சேர்ந்து நீங்களும் வேலை செய்யுங்கள். அவர்களுக்கு ஊக்கம் அளியுங்கள்

## வைராக்கியம் தான் என்னை உயர்த்தி விட்டுள்ளது



வே.திபாகரன்

**'திபா ஆட்ஸ்' என்ற பெயரில், கோயில்களுக்கு ஓவியம் வரைந்து வரும் புலோலியைச் சேர்ந்த வேலாயுதம் திபாகரன் தமது தொழில் அனுபவங்கள் குறித்து தொழில் மலருக்கு வழங்கிய செவ்வி -**

எனது ஆரம்பக் கல்வியை சித்தி விநாயகர் பாடசாலையில் கற்றேன். எனக்கு கல்வியில் மிகவும் ஆர்வம் இருந்தது. அதே நேரம் சித்திர வேலைகளிலும் கூடிய கவனம் இருந்தது.

ஆண்டு 9 படிக்கும்போது எனது தந்தையார் இறந்து விட்டார். அதன் பின்னர் மேசன் வேலைக்கு கூலியாளாகச் சேர்ந்து, வேலை செய்து வந்தேன். அந்த வேலையின கஸ்டத்தால் முதலாளியிடம் கேட்டு, மேசன் வேலை செய்யும் வீடுகளில் வெள்ளை அடித்தல், பெயின்ற் அடித்தல் போன்ற வேலைகளைச் செய்து வந்தேன்.

சிறுவயதிலே பாடசாலையில் படிக்கும் காலங்களில் வரைதலில் சிறப்புச் சித்தியையும், உறுப்பு எழுத்துப் போட்டியில் முதலிடமும் பெற்றேன்.

இதனால், நான் வேலைக்குச் செல்லும் காலங்களில் சிறிய சிறிய படங்களை எடுத்து வரைய ஆரம்பித்தேன்.

இந்த நேரத்தில் எழுத்துக்கள் எழுதுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. முதன் முதலாக ஒரு வீட்டிலே பெயர் ஒன்றை எழுதினேன். அது எனது முதல் வேலையாக இருந்ததால், அழகாக அமையவில்லை. வீட்டுக்காரர் என்னைத் திட்டினார்.

அதை ஒரு வைராக்கியமாக ஏற்படுத்திக் கொண்டேன். அந்த வைராக்கியம் தான் என்னை இந்தளவுக்கு உயர்த்தி விட்டுள்ளது. மேலும் எனக்குக் கிடைத்த வேலைகள் மூலம் என்னை வளர்த்துக் கொண்டேன்.

எனது திறமைகளை வெளிக்கொண்டு வரும் ஒரு சந்தர்ப்பமாக - வல்லிபுர ஆழ்வாரின் தேவஸ்தானத்துக்கு வர்ணம் பூசும் வேலை கிடைத்தது.

அதனைத் தொடர்ந்து பல கோயில்களில் ஓவியம் வரையக்கூடிய வாய்ப்பும் கிடைத்தது. ஒரு ஓவியம் வரைவதற்கு முன்னர், அந்தப் படத்தை மனதில் நிறுத்தி, மனதை ஒரு முகப்படுத்தல் வேண்டும். அப்போதுதான் அந்தப் படம் சிறப்பாக அமையும்.

மேலும் என்னிடம் வேலை செய்தவர்கள் 25 பேரை உருவாக்கினேன். என்னுடைய மாணவர்கள் எல்லாம் தனித்தனியே சொந்தமாகத் தொழில் செய்து வருகின்றார்கள். இதனைப் பார்க்கும் பொழுது எனக்குப் பெருமையாகத் தான் இருக்கிறது. ஆனால், ஒரு மனக் கவலையும் உண்டு.

ஒவ்வொரு மாணவர்களையும் உருவாக்கும்போது, அவர்கள் எனது இன்னொரு வலது கைபோல் இருப்பார்கள் என்று தான் உருவாக்கினேன். ஆனால், வேலை பழகியதும், பிரிந்து சென்று விடுகின் றனர்.

இதனைத் தவறு என்று கூறவில்லை. எனக்கு வேலை கூடுதலாக இருக்கும்போது, உதவி செய்தால் போதுமானது.

இன்றைய இளைஞர்கள் சிலர் தமது இளமைக் காலத்தை வீணடித்துக் கொண்டிருக்கிறார்கள். இளைஞர்களை நல்வழிப்படுத்துவதற்காக வேலையில்லாத இளைஞர்களுக்கு - வீடுகளுக்கு வர்ணம் தீட் டும்வேலைகளை எடுத்துக் கொடுத்தும், கலையில் ஆர்வமுள்ளவர்களை எனது நேரடிப் பார்வையில் வளர்த்தும் வருகின்றேன். இதனை வாசித்த பின்னர் தம்மை வளப்படுத்த விரும்பும் இளைஞர்கள் என்னுடன் தொடர்பு கொண்டால், அவர்களுக்கு என்னாலான உதவிகளைச் செய்வேன்.

மூன்று வருடங்களுக்கு முன்னர் நெல்லண்டை அம்மன் ஆலயத்தில் 'ஓவியவர்ண கிருபாநிதி' என்ற பட்டம் எனக்கு வழங்கப்பட்டது. இதைவிட நான் வேலைகளைச் செய்த ஒவ்வொரு கோயில்களிலும் பொன்னாடைகள், மோதிரங்கள் போன்றவையும்



வழங்கிக் கௌரவித்தமை பெரும் நிறைவைக் கொடுத்தது. மேலும் இந்தியக் கலைஞர்கள்கூட எனது ஓவியங்களைப் பார்வையிட்டு பாராட்டியமை மறக்கமுடியாத நிகழ்வாகும்..

**நேர்காணல் - க.கனெக்ஸ்**



## வன்னிப் பதிவுகள்

# விளையாட்டுத்துறை செயலகம் முல்லைத்தீவில் திறந்து வைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழீழ விளையாட்டுத் துறையின் செயலகம் கடந்த செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட விளையாட்டுத்துறை பொறுப்பாளர் கமல் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை கரைதுறைப்பற்று விளையாட்டு அலுவலர் திருக்குமார், உதைப்பந்தாட்ட நடுவர் வின்சன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழீழ தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் ரங்கன் ஏற்றிவைத்தார். விளையாட்டுத்துறையின் பெயர்ப்பலகையை முல்லைத்தீவு அரசியற்துறைப் பொறுப்பாளர் அரவிந்தன் திரைநீக்கம் செய்துவைத்தார்.

மாவட்ட விளையாட்டுத்துறைச் செயலகத்தை தமிழீழ விளையாட்டுத்துறை இணைப்பாளர் இன்பன் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர்கள், விளையாட்டு கழக நிர்வாகத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## வினாடி - வினா போட்டி

(வன்னேரி)

வன்னேரிக்குளம் ஸ்ரீ முருகன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 7 ஆம் திகதி முதல் நடைபெற்று வருகின்றது. இந்த மஹோற்சவ தினத்தை முன்னிட்டு, அந்தக் கிராமத்தின் பாடசாலை மாணவர்களுக்கான வினாடிவினா - போட்டிகள் வன்னேரி விளையாட்டுக் கழகத்தினரின் அனுசரணையுடன் நடாத்தப்பட்டு வருகின்றன.

இந்த மஹோற்சவத்தின் இறுதி நாளான நேற்றுமுன்தினம் இந்தப் போட்டியில் கூடுதலான புள்ளிகளைப் பெற்று வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கப்பட்டன.

## ட்ரக்ரரில் நசியுண்டு இளைஞர் மரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு பகுதியில் உழவு இயந்திரத்தில் நசியுண்டு இளைஞர் ஒருவர் மரணமானார். கடந்த ஞாயிற்றுக் கிழமை இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றி தெரியவருவதாவது - குளத்தின் சேற்றுக்குள் புதையுண்ட உழவு இயந்திரத்தை மீட்கும் பணிக்காக, உழவு இயந்திரத்தின் கீழ் மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞன்- உழவு இயந்திரம் தடம்புரண்டதில் அதற்குள் நசியுண்டே மரணமானார் எனத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவத்தில் பூநகரி நல்லூரைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் விமலச்சந்திரன் வயது (28) என்பவரே இவ்வாறு மரணமானவாரவர்.

## —முல்லைத்தீவு மாவட்ட—

# திணைக்களங்களுக்கு நிகொட் உதவியுடன் விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன், கமநல அபிவிருத்தித் திணைக்களங்களுக்கு விவசாய உபகரங்கள் கையளிக்கும் நிகழ்வு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.தர்மலிங்கம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை மாவீரர் 2ஆம் லெப்.மாலினியின் தந்தையார் ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக் கொடியை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் ஏற்றிவைத்தார். முல்லைத்தீவு மாவட்டக் கொடியை கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வைத் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்ட விவசாய அமைப்புக் கொடியை, விவசாய அமைப்புச் சம்மேளனத் தலைவர் சிவபாதம் ஏற்றிவைத்தார். தொடர்ந்து சுடர்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, முல்லைத்தீவு மாவட்ட நிகொட் திட்டப்பணிப்பாளர் சி.ரகுநாதபிள்ளை, முல்லைத்தீவு மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர், பிரதேச பொறுப்பாளர், வித்தியானந்தாக் கல்லூரி அதிபர் கே.கணேஸ் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

நிகழ்வின் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன், தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம், முல்லைத்தீவு மாவட்ட நிர்வாக சேவைப் பொறுப்பாளர் முரளி, முல்லைத்தீவு மாவட்ட நிகொட் திட்டப் பணிப்பாளர் சி.ரகுநாத பிள்ளை ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் தொடர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்துக்குட்பட்ட பத்து மாவட்ட அபிவிருத்தித் திணைக்களங்களுக்குமான விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டன. ஒவ்வொரு மாவட்டத்துக்கும், இரண்டு உழவு இயந்திரங்கள், பத்து நீர் இறைக்கும் இயந்திரங்கள் இரண்டு இயந்திர தெளிகருவிகள், ஐந்து சாதாரண தெளிகருவிகள் என்பன நிகழ்வில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களால் வழங்கப்பட்டன.

# அடிப்படை வசதிகளின்றி இயங்கும் வெற்றிலைக்கேணிப் பாடசாலை!

(வெற்றிலைக்கேணி)

வெற்றிலைக்கேணி றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலை எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருகின்றது.

கடந்த ஒருவருட காலத்துக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பாடசாலையில் கிணறு, மலசலகூடம் எதுவுமில்லாத நிலையில் காணப்படுகின்றது. தரம் ஐந்து வரையுமுள்ள இந்தப் பாடசாலையின் கட்டடம் 30x20 அடி அளவில் கொண்ட கிடுகுகளால் வேயப்பட்டு இயங்கி வருகின்றது.

இக்கூரை அண்மையில் ஏற்பட்ட கடும் காற்றுக் காரணமாக தூக்கி வீசப்பட்டது. இந்தக் கூரை மீண்டும் வேயப்படாவிட்டால், மாரிகாலத்தில் மாணவர், ஆசிரியர்கள் மழையில் நனைந்து கொண்டே கற்றல், கற்பித்தல் நடவடிக்கைளில் ஈடுபடமுடியுமென என பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (21)

# விநாயகர் குடியிருப்பு மக்களின் அவலநிலை எப்போது தீரும்?

(மணியங்குளம்)



மணியங்குளம் கிராமத்தை அண்டிய பிரதேசமாக விநாயகர் குடியிருப்பு அமைந்துள்ளது. இந்தக் குடியிருப்பில் 123 குடும்பங்கள் வசித்து வருகின்றன.

இவர்களுக்கான அத்தியவசிய வசதிகள் எதுவும் இதுவரையில் எவராலும் செய்து கொடுக்கப்படவில்லை. இந்தக் குடியிருப்புக்குச் செல்வதற்கான வீதிகள் செப்பனிடப்படவில்லை. அந்த வீதிகள் மணல் தெருக்களாகவே காணப்படுகின்றன. மழைகாலத்தில் பிரயாணம் செய்வதென்பது மிகவும் கஷ்டமான விடயமொன்றாகவேயுள்ளது.

இங்கே குடிப்பதற்கான நீர் இல்லை, கிணறுகள் இல்லாத நிலையில் குடிநீருக்குப் பெரும் தட்டுப்பாடும் நிலவுகின்றது. இதனால் இந்தக் கிராம மக்கள் மிகவும் கஷ்டத்தை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறு இருந்து வரும் மக்கள் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதமளவில் வீதித்திருத்த வேலைகளைச் செய்யுமாறும், அதற்கான கொடுப்பனவை உலக உணவுத் திட்டத்தின் மூலம் பொருட்களாக வழங்கப்படுமென சம்மந்தப்பட்ட அதிகாரிகளால் வாக்குறுதிகள் வழங்கப்பட்டதற்கமைவாக வேலைகள் அந்தப் பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்டது.

இதுவரையில் அவர்களுக்கான கூலிகளும் வழங்கப்படவில்லை. இதனால் கவலையடைந்துள்ள மக்கள் தமக்கு வீதியைப் புனரமைத்தும், குடிநீருக்கான கிணறுகளை அமைத்துத் தருமாறு கோரியுள்ளனர். இந்த நிலையில் இதுதொடர்பாக நடவடிக்கைகள் எடுக்குமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு கடிதங்கள் அனுப்பியும் அதற்கான பதில்கள் கிடைக்கவில்லையென அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்தனர்.

# திலீபனின் ஆரம்ப நாள் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தியாக தீபம் லெப்டினன்ட் கேணல் திலீபனின் ஆரம்பநாள் நிகழ்வு நேற்று கிளிநொச்சி சந்திரன் பூங்காவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வு கிளிநொச்சி தேசிய எழுச்சிப பேரவையின் செயலாளர் பசுபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுசுடரை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன்.தியாகம், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

அதைத் தொடர்ந்து தியாகி திலீபனின் திருவுருவப்படத்துக்கு ஈகைச்சுடரையும், மலர் மாலையையும் கிளிநொச்சி வர்த்தக சங்கச் செயலாளர் நவரத்தினராசா ஏற்றிவைத்தார்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் நிகழ்த்தினார்.

இதேபோன்று அரசு, அரசசார்பற்ற நிறுவனங்களிலும் தியாகி திலீபனின் ஆரம்ப நாள் நிகழ்வு இடம்பெற்றது.

# பாண்டியன்குளப் பிரதேசத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட பாண்டியன்குளப் பிரதேசத்தில் செல்வபுரம் கிராமத்தில் மாதாந்த வீரமுரசு நிகழ்வு, வலயப் பொறுப்பாளர் சுடர்குமரனின் ஒழுங்குபடுத்தலில் செல்வபுரம் கலைமகள் விளையாட்டு மைதானத்தில் பாண்டியன்குளம் கோட்டத் தேசிய எழுச்சிப் பேரவை செயலாளர் சி.சண்முகலிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொதுச்சுடரை முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் மயூரன் ஏற்றிவைக்க, மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு செல்வபுரம் ஊரக தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.சந்திரசேகரம், மாவீரரின் தந்தையான ஜெயராசா, செல்வபுரம் மாவீரர் படிப்பகத் தலைவர் இ.செல்வநாயகம் ஆகியோர் ஈகைச்சுடர் ஏற்றி மலர் வணக்கம் செலுத்தினர்.

தலைமையுரையைத் தொடர்ந்து கருத்துக்களை, முல்லைத்தீவு மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை உறுப்பினர் அ.தனிநாயகம், பாண்டியன்குளப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவை உபசெயலாளர் சு.பரமானந்தம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் நி.வேதவனம் ஆகியோர் நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வின் சிறப்புரையை முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.முகுந்தன் நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

## 'சோஆ' நிறுவனம் உதவி

(கட்டைக்காடு)

கட்டைக்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர், பெற்றோர்களின் கோரிக்கைக்கு இணங்க 'சோஆ' நிறுவனம் பாடசாலைக்குத் தேவையான நான்கு கரும்பலகைகள், இரண்டு உருக்கு அலுமாரிகள் என்பவற்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

அத்துடன் பாடசாலை மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கும் முகமாக பாடசாலை வளவினுள் குடிநீர்க் கிணறு அமைப்பதற்கு முப்பது சீமெந்துப் பைக் கற்றுக்களையும் வழங்கியுள்ளது. (21)

# கிளிநொச்சி மாவட்ட பாடசாலைகளில் இலவச மருத்துவ சிகிச்சை முகாம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளில் மருத்துவ முகாம் மூலம் இலவச சிகிச்சை நடைபெறவுள்ளது. இந்த மருத்துவமுகாம் யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுடன, கிளிநொச்சி மருத்துவ சங்கம் இணைந்து நடத்தவுள்ளது.

இந்த இலவச சிகிச்சை முகாம் எதிர்வரும் 20,21,22 ஆம் திகதிகளில், உருத்திரபுரம் மகாவித்தியாலய புனித பாத்திமா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், கிளிநொச்சி இந்து ஆரம்ப வித்தியாலயம், அக்கராயன் மகாவித்தியாலயம், ஸ்கந்தபுரம் இலக்கம் 1 பாடசாலை, ஸ்கந்தபுரம் இலக்கம் 2 பாடசாலை, கண்ணகைபுரம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஊற்றுக்குளம் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயம், செல்வாநகர் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, யூனியன்குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தரம் 1 முதல் தரம் 5வரையான மாணவர்களுக்கு, கண்சிகிச்சை, பற்சிகிச்சை போன்றன இலவசமாக மேற்கொள்ளப்படும்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்*
*துணைவலியும் தூக்கிச் செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சொல்ஹெய்மும், விக்கிரமாதித்தனும்...

தன்முயற்சியில் சற்றும் தளராத விக்கிரமாதித்தன் மீண்டும் முருங்கை மரத்தின் மீதேறி வேதாளத்தை இழுத்தெடுத்து தோளில் போட்டபடி கீழிறங்கி நடக்கலானான். சற்றுத் தூரம் சென்றதும் வேதாளம் பலமாகச் சிரித்தது. விக்கிரமாதித்தன் திடுக்குற்று ஏன் சிரிக்கிறாய் என்று கேட்டான்.

மீண்டும் பலமாகச் சிரித்த வேதாளம் உன்னைப் பார்க்க பாவமாக இருக்கிறது என்று கூறியபடி...

எனத்தொடரும் அம்புலிமாமா சஞ்சிகையில் ஆண்டுக் கணக்காக தொடர்ந்து வெளிவரும் விக்கிரமாதித்தன் கதையே இப்போது நினைவுக்கு வருகிறது.

அதாவது, நோர்வேயின் சமாதான அனுசரணை முயற்சிகளுக்கான சிறப்புத் தூதுவர் எரிக்சொல்ஹெய்மின் தளரா முயற்சியை நோக்கும் போதே இந்தக் கதை நினைவுக்கு வருவதை தடுக்க முடியாமலுள்ளது.

கடந்த இரண்டாண்டுகளுக்கும் அதிகமான காலம் இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான தீர்வொன்றினை பேச்சுவார்த்தைகள் மூலம் வென்றெடுப்பதற்கான சமாதான நடவடிக்கைப் பணியில் அலுப்போ, சலிப்போ இன்றி சற்றும் தளராத விக்கிரமாதித்தன் போன்று, அவர் இயங்கி வருவதைப்பார்க்கும் அவரை அந்தக் கதையோடு ஒப்பிட்டுப் பார்க்க மனம் எண்ணவே செய்கிறது.

எத்தனை எதிர்ப்புகள், எத்தனை சவால்கள், எத்தனை அவமதிப்புக்கள் இன்னும் எத்தனையோ அதிருப்திகள் தரும் சம்பவங்களை அந்த மனிதன், தனது இந்தச் சமாதான முயற்சிப் பணியிலான நீண்ட நெடும்பயணத்தில் அவர் எதிர்கொண்டிருப்பார்? ஆனால், அவர் ஒருபோதும் மனம் சலித்தது கிடையாது.

அன்று தொடக்கம் இன்றுவரை என்றும் மாறாத அதே புன்னகையுடன் தனது முயற்சிகளை அவர் தொடர்ந்து கொண்டே வருகின்றார்.

அவர் சமாதானததை ஏற்படுத்தும் தனக்களிக்கப்பட்ட கடமைப் பொறுப்பை, நியாய நோக்குடன் மேற்கொண்டார் என்பதற்காக புலிகளின் ஆதரவாளர் என முத்திரை குத்தப்பட்டார். அவரின் செயற்பாடுகள் அரசுக்கு சாதகமாக இல்லை என்பதற்காக அவரைக் கொடும்பாவியாக உருவாக்கி எரித்தார்கள்... அவர் மீதுள்ள கோபத்துக்காக அவரது நாட்டின் தேசியக் கொடியையே பேரினவாத வெறியர்கள் தீயிட்டுக் கொழுத்தினார்கள். ஆனாலும், அவர் தோளில் சுமக்கத் தொடங்கிய சமாதானத்தை கீழே இறக்கிப் போடவில்லை.

பலவேளைகளில் சமாதானம் முருங்கை மரத்தை நோக்கித் துரத்தப்பட்டபோதும், அவர் சலிப்படையாது அதனை மீண்டும் எடுத்து சுமக்கும் மனோபாவத்தைக் கொண்டவராகவே செயற்பட்டார்.

அவர் பொறுமையற்று சினங்கொள்பவராகவோ, சோர்வும் சலிப்பு முற்று தன்பணியைக் கைவிடுபவராகவோ இருந்திருந்தால் இலங்கை மீண்டும் யுத்த நெருப்பில் எரியத்தொடங்கியிருக்கும். ஆனால் அவர் அப்படி செயற்படவேயில்லை.

ஒவ்வொரு பின்னடைவின்போதும் அடுத்த முன்னெடுப்புக்கான தயார்ப்படுத்தலில் ஈடுபடுபவராகவே இருந்தார்.

இப்போது மீண்டும் அதே நம்பிக்கை தளராத, விக்கிரமாதித்தனாகவே இங்குவந்துள்ளார். ஆனால், இலங்கையரச ஆட்சித் தலைமை அவரது முயற்சிக்கு மதிப்பளித்து நடக்குமா என்ற கேள்விக்கு விடை 'இல்லை' என்றே கூறவேண்டும்.

இந்தத் தலையங்கம் எழுதும் இக்கணம் வரை சமாதான முன்னெடுப்பு முயற்சிகள் தொடர்பாக இலங்கை அரசோ, ஜனாதிபதியோ நேர்மையானதும், நியாயமானதும், வெளிப்படையானதுமான கருத்து நிலைப்பாடொன்றுக்கு இன்னமும் வந்துள்ளதாகத் தெரியவில்லை.

அவர்களின் தற்போதையநிலை - சமாதானத்தை முருங்கை மரத்திற்கும், கொள்கைகளுடனும் இயங்குவதாகவே உள்ளது.

இம்முறை பரந்தளவில் பலதரப்பட்டவர்களுடனும் சந்தித்து பேசும் நோக்குடன் இங்குவந்து சொல்ஹெய்ம் ஜனாதிபதியுடன் என்ன பேசப்போகிறார், ஜனாதிபதி அதற்கு என்ன சொல்லப் போகிறார் என்பதெல்லாம் எதிர்வுகூற இயலாத விடயங்களேயாகும்.

ஆனால், சமாதானமுயற்சிகளை - இடைக்கால நிர்வாக தன்னாட்சி அதிகாரசபை தொடர்பான விடயத்தை ஆராய்வதிலிருந்து ஆரம்பிக்க அரசு இன்னமும் தன்னை தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை என்பது மாத்திரம் உண்மை.

பேரினவாத சக்திகளையும், சமாதான விரோதிகளையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் இறுக்கமாக வைத்திருக்காமல், அமைதி முயற்சிகளில் நம்பிக்கை தரும் மாற்றங்களை அரசால் ஏற்படுத்தவே முடியாது.

இந்தச் சூழலில் ஜனாதிபதியால் சமாதான முயற்சிகளை உடனடியாக ஆரம்பிக்கும் எந்த முடிவுக்கும் வரவேமுடியாது.

எனவே, இம்முறையும் சொல்ஹெய்ம் அவர்களின் வருகை குறிப்பிடத்தக்க அளவில் எதையாவது சாதிக்கப்போவதில்லை என்பதே அரசியல் நோக்கர்களின் கருத்தாகவும் உள்ளது.

இன்னமும் சமாதான முயற்சிகளில் தீவிரமாகவும், விருப்பார்வத்துடனும், நேர்மைமிக்க விசுவாசத்துடனும் ஈடுபடும் மனோதர்மம் ஜனாதிபதிக்கும் இல்லை, அரசுக்கும் இல்லை.

இந்தச் சூழலில் விடுதலைப் புலிகளின் சமாதான முயற்சிகளுக்கான உத்தரவாதத்தை மட்டும் வைத்துக்கொண்டு சொல்ஹெய்மால் என்னதான் செய்யவிட முடியும்?

இன்றைய அரசியல் யதார்த்தமானது சொல்ஹெய்மை - தொடர்ந்தும் சமாதானத்தை தோளில் சுமந்து திரியப்போகும் விக்கிரமாதித்தானவே இருக்கவைக்கப்போகிறது என்றே தோன்றுகின்றது.

சமாதானம் - தன்னுடையதும், சொல்ஹெய்முடையதும் அல்லாடும் நிலையை நினைத்து தனக்குள் சிரித்துக்கொள்ளவே செய்யும்.

## நாடும் நடப்பும்




# பனோஸ் அமைப்பின் ஏற்பாட்டில் ஊடகவியலாளருக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

பனோஸ் சவுத் ஏசியா அமைப்பு - இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் இலங்கை மக்களின் சமூகப் பிரச்சினைகள் குறித்து ஆய்வுகளை மேற்கொள்வது மற்றும் தீர்வுகளை தேடுதல் என்பன மேற்கொள்ளப்படவிருக்கின்றன.

ஒரு வருட கால வரையறை கொண்ட இந்தப் புலமைப் பரிசில் பயிற்சித் திட்டமானது முதற்தடவையாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மும்மொழிகள் சார் ஊடகவியலாளர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும், இந்த புலமைப்பரிசில் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட 11 ஊடகவியலாளர்களுக்கு இந்தத் திட்டத்தை அறிமுகம் செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சூரியன் எவ்.எம். பிரதம செய்தி ஆசிரியர் நடராசா குருபரன், தமிழ் இலத்திரனியல்துறை சார்பில் தெரிவுசெய்யப்பட்டார்.

பிராந்திய தமிழ் ஊடகவியலாளர்களான யாழ். தினக்குரலைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் ரகுராம், மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சுயாதீன ஊடகவியலாளரான நயன கணேசன், தினக்குரல் பத்திரிகையின் ஆசிரிய பீடத்தைச் சேர்ந்த தேவகௌரி, மகாலிங்கசிவம் ஆகிய தமிழ் ஊடகவியலாளர்கள் இந்தப் பயிற்சிநெறிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

7 சிங்கள, ஆங்கில ஊடகவியலாளர்களும் இந்தப் பயிற்சி நெறியில் இணைக்கப்பட்டுள்ளனர்.

# பயங்கரவாத ஒழிப்புக்காக கூட்டுச் செயற்குழு அமைப்பு

(கொழும்பு)

இலங்கை உட்பட ஏழு ஆசிய நாடுகள் இணைந்து பயங்கரவாதத்தை ஒழித்துக்கட்டும் நோக்கத்துக்கான கூட்டுச் செயற்குழு ஒன்றை அமைத்துள்ளன.

இந்தக் குழுவில் இந்தியா, நேபாளம், பூட்டான், மியன்மார், பங்களாதேஷ், தாய்லாந்து ஆகிய நாடுகளுடன் இலங்கையும் அங்கம் வகிக்கின்றது.

இந்தக் கூட்டுச் செயற்குழு அமைக்கப்பட்டது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருத்துத் தெரிவித்தபோது -

பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் அடங்கலாக அனைத்து விடயங்களையும் இந்தக் குழு ஏற்கனவே ஆராய்ந்துள்ளது. தீவிரவாதிகள் நாடுகளின் எல்லைப்புறங்களில் பாதுகாப்பற்ற நுழைவாயில்களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்துகிறார்கள்.

இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்த சகல நாடுகளும் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

# எரிக் சொல்ஹெய்ம் ஈ.பி.டி.பியுடன் சந்திப்பு!

(கொழும்பு)

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கர் இருவரும் நேற்று முன்தினம் ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான குழுவினரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

இந்தப் பேச்சுவார்த்தையின் போது சர்வதேச சமூகத்தின் பிரதிநிதிகளை கிளிநொச்சிக்கு சென்று பிரபாகரனைச் சந்திப்பதன் மூலமே அவர்களது உண்மையான நிலைப்பாட்டைத் தெரிந்துகொள்ள முடியுமென்பதை ஈ.பி.டி.பியினர் வலியுறுத்தியதாகத் தெரியவருகிறது.

சுமார் ஒரு மணித்தியாலயம் நீடித்த இந்தக் கலந்துரையாடலில் ஈ.பி.டி.பி கட்சியின் சார்பில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.தவராசா, கலாநிதி விக்னேஸ்வரன் மற்றும் மனித கௌரவத்திற்கான மன்றத்தின் பிரதிநிதியும் சட்டத்தரணியுமான மகேஸ்வரி வேலாயுதம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தச் சந்திப்பின் இறுதியில் கருத்து வெளியிட்ட நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் கடந்த காலங்களில் படுகொலை செய்யப்பட்ட ஈ.பி.டி.பி உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும், கட்சிக்கும் அனுதாபங்களைத் தெரிவித்ததோடு, எல்லா வகையான படுகொலைகளையும் தாம் கண்டிப்பதாகவும் தெரிவித்தார்.

**ஒரு வருட காலத்துக்குள்**

# வாழ்க்கைச் செலவுப் புள்ளி 10.5 வீதத்தால் அதிகரிப்பு!

கடந்த வருடம் ஓகஸ்ட் மாதத்திலிருந்து இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் வரையான ஒரு வருட காலப்பகுதியில் வாழ்க்கைச் செலவுச் சுட்டெண் 10.5 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாக, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

கடந்த அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிப்பின் வேகத்தை 5.2 வீதத்திலிருந்து 2.6 வீதமாகக் குறைத்தது.

முன்னைய அரசாங்கக் காலத்தில் வாழ்க்கைச் செலவு குறித்து கண்காணிப்புக் குழுவொன்று செயற்பட்டது. இந்தக் குழு இரு வாரங்களுக்கு ஒரு முறை கூடி வாழ்க்கைச்செலவு அதிகரிப்புத் தொடர்பாக ஆராய்ந்தது.

இறக்குமதி வரி உட்பட பல தீர்மானங்களை இந்தக் குழுவின் ஊடாக எடுக்கப்பட்டதாகவும், அந்தத் திட்டம் தற்பொழுது செயற்படுத்தப்படுவதில்லை என்றும் பந்துல குணவர்த்தன மேலும் தெரிவித்தார்.

# அம்பாறை மாவட்டத்தில் ஆயுதங்கள் மீட்பு!

அம்பாறை மாவட்டம் - சாய்ந்தமருது மற்றும் சம்மாந்துறை பிரதேசங்களில் நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையொன்றின் போது சட்ட விரோத ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசங்களில் இடம்பெற்றுவரும் சமூக விரோத நடவடிக்கைகளை தடுப்பதற்காக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தேடுதலின் போது சில வீடுகளிலிருந்து இவை கைப்பற்றப்பட்டன.

கல்முனை பொலிஸ் தரப்பு தகவலின்படி - சம்மாந்துறையில் ரி-56 ரக துப்பாக்கியொன்றும், அதற்கான ரவைகளுடனும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட 5 கைத்துப்பாக்கிகளும் கைப்பற்றப்பட்டன.

இந்தச் சம்பவம் தொடர்பாக முஸ்லிம் இளைஞரொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மேலும் சிலர் சந்தேகத்தின் பேரில் தேடப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# அதிகரித்த ஓய்வூதிய வழங்கலுக்கு விபரப் படிவங்கள் அனுப்பிவைப்பு

தென்மராட்சி பிரதேச செயலகம் மூலம் ஓய்வூதியம் பெறுகின்ற வெளிநாட்டில் வசிக்கும் ஓய்வூதியர்களுக்கு அதிகரித்த ஓய்வூதியம் வழங்குவதற்கு ஏதுவாக அவர்களிடமிருந்து விபரங்களைக் கோரும் படிவங்கள் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட தபால் முகவரிக்கு தென்மராட்சி பிரதேச செயலக ஓய்வூதிய பகுதியினரால் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேச செயலகம் மூலம் வெளிநாட்டு ஓய்வூதியம் பெறுகின்ற 120 பேரில் அதிகரித்த ஓய்வூதியம் பெறத் தகுதி வாய்ந்த 86 பேருக்கு இக்கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவர்களிடமிருந்து உரிய விபரங்கள் கிடைத்ததும், மீளாய்வு செய்யப்பட்டு உடன் ஓய்வூதிய அதிகரிப்பு வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (24)

கல்வியியல் - பா.தனபாலன்

# தேசியக் கல்வியியற் கல்லூரிகளும் அவற்றிற்கான அனுமதிகளும்!




இலங்கையின் தேசிய கல்வியியற் கல்லூரிகள்

கல்வி ஒவ்வொருவருக்கும் ஓர் உரிமையாகவும், அது எல்லாவித சுதந்திரங்களுக்கும், புரட்சிகரமான மேம்பாடுகள் அனைத்துக்குமான அடிப்படையாகவுமுள்ளது.

கல்விக்குத் தெய்வ உருவம் கொடுத்து, கல்வியைத் தெய்வமாக வழிபடும் மரபு தமிழர் மரபு. இந்த வகையில் கல்விய்ய மாணவர்களுக்கும், சமூகத்திற்கும், நாட்டுக்கும் வழங்கும் தெய்வங்களாக ஆசிரியர்கள் உள்ளனர். இவ்வாறான ஆசிரியர்களை உருவாக்க அவர்களுக்கான முன்சேவைப் பயிற்சியை வழங்கி உயர் தொழில் வாண்மையை ஏற்படுத்த 1985 ஆம் ஆண்டு கல்வியற் கல்லூரிகள் உருவாக்கப்பட்டன.

தற்போது இலங்கையில் 17 தேசிய கல்வியியற் கல்லூரிகள் செயற்பட்டு வருகின்றன. இவை தேசப்பற்றுள்ள, அர்ப்பணிப்புள்ள ஆசிரியர்களை உருவாக்குபவையாகவும், பாடசாலைகளிலுள்ள பௌதீக - மனித வளங்களில் இருந்து உச்சப் பயன்பாட்டைப் பெறக்கூடிய வகையில் ஆசிரியர் கல்வியில் குறிப்பிடத்தக்க வகையில் முன்னேற்றத்தினைப் பெறக்கூடியனவாகவும் உள்ளன.

### முகிழ்நிலை ஆசிரியர் தெரிவு

அரசாங்க வர்த்தமானி மூலம் விளம்பரப் படுத்தப்பட்டு ஒவ்வொரு வருடமும் க.பொ.த உயர்தரப் பரீட்சையின் 'இசற்' புள்ளி அடிப்படையில் தேசிய கல்வியியற் கல்லூரிகளில் முகிழ்நிலை ஆசிரியர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்கள் இலங்கைப் பிரஜையாக இருப்பதுடன், திருமணம் ஆகாதவர்களாகவும், வேறு தொழில் புரியாதவர்களாகவும், இருபத்தைந்து வயதிற்கு மேற்படாதவர்களாகவும் இருக்கவேண்டும்.

இந்த வகையில் இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் மூன்றாம் திகதி வர்த்தமானியில் தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு முகிழ்நிலை ஆசிரியர்களை உள்வாங்க விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்கள் 30.09.2004 க்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும். வர்த்தமானி அறிவுறுத்தல்களை மிகக் கவனமாக வாசித்து விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்த வேண்டும். ஒரு விண்ணப்பதாரி மூன்று பாட நெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம். ஆனால், ஒரு விண்ணப்பப் படிவத்திலேயே விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும் பரீட்சைச் சுட்டிலக்கம், வருடம், பாட நெறி, இலக்கங்கள், பிழையாக அல்லது நிரப்பப்படாமல் தெளிவாக இல்லாதுவிடத்து, விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தொடர்ந்து விண்ணப்பம் தெடர்பாக முறைப்பாடுகளைச் செய்யும் போது விண்ணப்பத்தின் நிழற் பிரதியும், விண்ணப்பம் பதிவு செய்த பதிவுத் தபாற்சிட்டையும் தம் வசம் வைத்திருக்க வேண்டும்.

விண்ணப்பங்களை ஒழுங்கமைக்கும் பணி, கணினிகளினாலேயே மேற்கொள்ளப் படுவதால், மிகவும் அவதானமாக விண்ணப்பதாரிகள், விண்ணப்பங்களை நிரப்ப வேண்டும். விண்ணப்பதாரிகள், தாம் க.பொ.த உயர்தரத்தில் கற்ற பாடங்களுக்குப் பொருத்தமான பாடநெறியையும் தெரிவுசெய்ய வேண்டும்.

### தமிழ் மொழிப் பாடநெறிகளுள்ள தே.க.கல்லூரிகளும் பாடநெறிகளும்

***யாழ்ப்பாணம் - (கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி)*** ஆரம்பக் கல்வி, சித்திரம், சங்கீதம், நடனம், நாடகமும் அரங்கியலும், விசேட கல்வி ( ஆங்கில மொழிமூலம் - ஆங்கிலம் நூலக விஞ்ஞானம், கணிதம், விஞ்ஞானம்)

***வவுனியா -(பூந்தோட்டம் தேசிய கல்வியியற் கல்லூரி)*** - ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், உடற்கல்வி, இந்து சமயம், கத்தோலிக்கம் அல்லது கிறிஸ்தவம் விவசாயம் ( ஆங்கில மொழிமூலம் - தகவல்தொழில்நுட்பம்)

***மட்டக்களப்பு - (தாளங்குடா தேசிய கல்வியியற் கல்லூரி)*** ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், கணிதம், தொழில்நுட்பம், ஆங்கில மொழிமூலம் - தகவல்தொழில்நுட்பம்)

***தர்காநகர் - (அளுத்கம களுத்துறை தேசிய கல்வியியற் கல்லூரி - பெண்கள் மட்டும்)*** - ஆரம்பக் கல்வி, விசேட கல்வி (ஆங்கில மொழி மூலம் - தகவல் தொழில் நுட்பம்)

***றுகுணு தேசிய கல்வியியற் கல்லூரி (அக்மீமன - காலி)*** ஆரம்பக் கல்வி, உணவுத் தொழில்நுட்பம்

***அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி (அட்டாளைச் சேனை - அம்பாறை)*** - ஆரம்பக்கல்வி, கணிதம், இஸ்லாம், சித்திரம் (ஆங்கில மொழிமூலம் - தகவல் தொழிநுட்பம் )

***ஶ்ரீபாத தேசிய கல்வியியற்கல்லூரி (பத்தன - நுவரெலியா)*** - ஆரம்பக் கல்வி, விஞ்ஞானம், கணிதம், நடனம், சங்கீதம்.

தமிழ் மொழி விண்ணப்பதாரிகள் ஆங்கில மொழிமூல பஸ்துன்ரட்ட , மகாவலி ஆகிய கல்வியியற் கல்லூரிகளில் ஆங்கிலம், நூலக விஞ்ஞானம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

மகாவலி தேசிய கல்வியியற் கல்லூரியில் மேலைத்தேய சங்கீதத்துக்கும் விண்ணப்பிக்கலாம். அத்துடன் ஆங்கில மொழிமூலம் விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடநெறிகளைப் பின்பற்ற - நில்வள, சியன கல்வியியற் கல்லூரிகளுக்கும் விண்ணப்பிக்கலாம். இது தொடர்பான விளக்கங்களை க.பொ.த உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றிருப்பது அவசியம்.

சரியான விளக்கங்கள் இன்றி உயர்தர வகுப்பில் பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்கின்றனர். இதனால், அவர்களுடைய எதிர்கால வாழ்வு கேள்விக்குறியாகின்றது. மேலும், தொழில் வழிகாட்டல் சேவைகளும், இது தொடர்பான விழிப்புணர்வுகளும், எமது பிரதேச மாணவர்களுக்குத் தேவையாகவுள்ளது. க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலப் பாடத்தில் விசேட திறமைச் சித்தியின் அவசியமும், அதன்மூலம் இலகுவாக பல பாடநெறிகளைப் பயிலும் வாய்ப்புக்களும் உள்ளன.

தேசிய ரீதியில் தெரிவுகள் 2008 ஆம் ஆண்டு இலங்கைப் பாடசாலை அமைப்புக்களின் தேவையான ஆசிரியர் எண்ணிக்கைக்கு ஏற்பத் தீர்மானிக்கப்படுகின்றன. உடற்கல்வி, நடனம், சங்கீதம் ஆகிய பாடத் துறைகளில் செய்முறைப் பயிற்சிகளும் திருப்திகரமான அடைவுகளைப் பெறவேண்டும். மற்றும் ஆங்கில மொழிமூலப் பாட நெறிகளுக்கு க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கில மொழி, ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அத்துடன் கஷ்டப் பிரதேச மாணவர் தெரிவு அந்தப் பிரதேச கல்வி வசதிகள் பகிரப்பட்டுள்ள விகிதத்திற்கு ஏற்ப, கஷ்டப் பிரதேசமாக இனங்காணப்பட்டுள்ள 15 மாவட்டங்களுக்குரிய விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர், கஷ்டப் பிரதேச மாவட்டங்களாக மாத்தளை, நுவரெலியா, அம்பாந்தோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை,அம்பாறை, புத்தளம், அநுராதபுரம், பொலநறுவை, பதுளை, மொனராகல என்பனவுள்ளன.

### பயிற்சிநெறி

மூன்று வருடங்களைக் கொண்ட இந்தப் பயிற்சிநெறி நவீன உலக ஆசிரிய வாண்மைப் பயிற்சிகளுக்கு ஒப்பான, உயர்வான தொழிற் தகைமை கொண்டதாகும். இரு வருடங்கள் தேசிய கல்வியற் கல்லூரிகளில் வதிவிடப் பயிற்சியையும், ஒரு வருடம் கல்லூரியுடன் இணைக்கப்பட்ட பாடசாலையில் உள்ளகப் பயிற்சியையும் மேற்கொள்ள வேண்டும். முதலாம், இரண்டாம் வருட முடிவில் நடாத்தப்படும் ஆண்டிறுதி உள்வாரிப் பரீட்சையிலும் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்படும் வெளிவாரிப் பரீட்சையிலும் சித்தியடைய வேண்டும். பயிற்சிக் காலத்தில் பயிற்சியாளரது நடத்தை, ஊக்கம், கல்விச் செயற்பாடுகளில் முன்னேற்றம் என்பன எதிர்பார்க்கின்ற தரத்திற்கும் குறைவாகக் காணப்படின், அவர் பயிற்சியிலிருந்து எந்த நேரத்திலும் நிறுத்தப்படலாம். பயிற்சியை திருப்திகரமாகப் பூர்த்தி செய்தவர்களுக்கு கற்பித்தலில் தேசிய டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படுவதுடன், ஆசிரிய நியமனங்களில் முன்னுரிமை வழங்கப்படும்.

### விமர்சனங்கள்

தேசிய ரீதியாக மேற்கொள்ளப்படும் கல்வியியற் கல்லூரி அனுமதிக் கொள்கைகள், தெரிவுகள் - பிரதேச ரீதியாக, மொழி ரீதியாகப் பல பாதிப்புக்களை ஏற்படுத்தி விடுகின்றன. குறிப்பாக, தமிழ் மொழிப் பிரிவில் இது தொடர்பான பல பாதிப்புக்கள் நிலவுகின்றன. உதாரணமாக - இந்த வருடம் தமிழ் மொழி, சமூகக்கல்விப் பாடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படவில்லை. மட்டக்களப்பு தேசிய கல்வியியற்கல்லூரியில் இந்தப் பாடநெறிகள் சிறப்பாகப் போதிக்கப்பட்டு வந்தாலும், இந்தத்துறை சார்ந்த ஆசிரியர் பற்றாக்குறை பெருமளவு நிலவுகின்றது.

தேசிய ரீதியில் சிங்கள மொழி மூல தாய்மொழி, சமூகக்கல்விக்கு போதுமான ஆசிரியர்கள் (தேவையானதைவிட கூடுதலாக) இருந்தால், தமிழ்மொழி மூலமும் குறித்த துறைக்கு விண்ணப்பங்கள் கோரப்படாதது எந்தவிதத்தில் நியாயமாகும். இதே போல பல விடயங்கள் காணப்படுகின்றன.

சிங்கள மொழி மூலப் பாடசாலைகளில் இன்னும் பத்து வருடங்களுக்குப் போதுமான ஆசிரியர்கள் உள்ளதாகவும், சில கல்வியியற்கல்லூரிகளை மூடி ஆசிரிய கல்வி நிறுவகங்களாக மாற்றவேண்டுமென, உலக வங்கி அமைப்புச் சீராக்க அறிக்கை தெரிவிக்கின்றது. ஆனால், தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை பல ஆயிரங்களாக உள்ளது. ஆசிரியர்கள் ஓய்வு பெறுதல், சேவைக்கு வெளியே செல்லுதல் போன்ற பல்வேறு காரணங்களால் பற்றாக்குறை ஏற்படுகின்றது. வட - கிழக்குப் பிரதேசங்களில் நியமனம் பெறும் ஆசிரியர்களில் பெண்கள் வெளிநாடுகளுக்கு ஒவ்வொரு வருடமும் செல்கின்றனர். இதனால் ஓர் தொடர்ச்சியான ஆசிரியர் பற்றாக்குறைச் சுற்று ஏற்பட்டு பாடசாலைகளில் கற்பித்தல் தேய்வுவீதம், மாணவர் கற்றல் தேய்வுவீதம் அதிகரிக்கின்றது.

மேலும் மாணவர் ஆசிரியர் வீதம் (STR), மாணவர் சேர்வு முன்னெறிகை, எதிர்காலவியல் போன்ற பல காரணிகளை ஆராய்ந்து தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய தமிழ்மொழி மூல விண்ணப்பதாரிகளைக் கூடுதலாகச் சேர்க்க வேண்டிய அவசரம், அவசியம் தற்போது எழுந்துள்ளது. ☆

மருத்துவம் - எஸ்.ஜெயா

# சின்னமுத்தும் ஜேர்மன் சின்னமுத்தும்

இன்று எல்லா இடங்களிலும், சின்னமுத்து தடை மருந்து கொடுக்கப்படுகின்றது. இந்த நடைமுறை பரவலாக கிராம மட்டம் தொடக்கம், நகர மட்டம் வரையாக இந்தச் செயற்பாடு பரந்துள்ளது. இதற்கான உதவிகளைச் செய்வதில் தொண்டர் அமைப்புக்களும், பொதுச் சேவை நிறுவனங்களும் முன்னின்று செயற்படுவதைக் காணலாம். இந்த மருந்து ஏன் கொடுக்கப்படுகிறது. இதன் தாக்கம் என்பன பற்றி எல்லோரும் அறிய வேண்டியது முக்கியமானதாகும். இது இரண்டு வகைப்படும்.

I) சின்னமுத்து

II) ஜேர்மன் சின்னமுத்து

### சின்னமுத்து

இது வைரஸ் காரணமாக சிறுவர்கள் மத்தியிலே காணப்படும் தொற்றுநோயாகும். இந்த வைரஸ் சாதாரணமாக மூக்கு, தொண்டை ஆகியவற்றின் சுரப்புக்களிலும் சிறுநீரிலும் காணப்படும். இது சாதாரணமாக மூன்று கட்டங்களை உள்ளடக்கியது.

I) ஏறக்குறைய 10 - 12 நாட்களுக்கு அதிகமாக நோய்க் குணங்கள் காணப்படினும், வைரஸ் உடலினுள்ளே பெருகிக் கொண்டிருக்கும்.

II) பிடிசுரம் போன்ற நோய்களுக்குரிய குணங்கள் காணப்படும். இந்தக் கட்டத்துக்குரிய காலம் 4 - 5 நாட்களாகும்.

இந்தக் கட்டத்திலே கண் சிவக்கும். சூரிய வெளிச்சத்தைப் பார்க்க முடியாதிருக்கும். கன்னங்களின் உட்புறத்திலும், தொண்டையிலும் சிறிய பருக்கள் தென்படும். நாட்செல்லச் செல்ல கடுமையான வரண்ட இருமலும் உண்டாகும்.

III) இந்தக் கட்டத்தில், பின்காதிலே ஆரம்பித்த சிறியபருக்கள் முகம், கழுத்து, உடல் முழுவதும் பரவல் அடைவதோடு கடுமையான காய்ச்சல் காணப்படும்.

***இந்த நோய் மூலம் ஏற்படக்கூடிய பக்க விளைவுகள் இரண்டு. அவையாவன.***

I) மூச்சுக் குழாய், நுரையீரலழர்ச்சி.

II) நடுக்காதிலே தொற்று ஏற்படக்கூடும்.

ஒருவகை வைரஸ் காரணமாகவே சின்னமுத்து உண்டாகின்றது என்பதால், பக்கப் பாதிப்புக்கள் ஏற்படாதவிடத்து சிகிச்சை வேண்டியதில்லை. நோய் தொற்றிய பின்னர் நாட் செல்லச்செல்ல வைரஸின் வலுவை நிர்மூலமாக்கும் பிற பொருளெதிரிகள் உடலினுள்ளே உண்டாகின்றன.

இந்தக் கட்டத்திலே திரவ மருந்துகளை நிலத்திலே தெளிப்பதும், கடுமையான சூரிய ஒளி படாத இடத்தில் நோயாளியை வைத்திருப்பதும் முக்கியமாகும்.

### தடுப்பு மருந்து

i) தொற்றுக் காலம் முடியும் வரை குழந்தையை வீட்டிலே வைத்திருத்தல் வேண்டும்.

ii) கமகுளோபியூலின் மூலம் தற்காலிகமான பாதுகாப்பினைக் கொடுக்கலாம்.

iii) எல்லா குழந்தைகளுக்கும் முதலாவது வயது முடிவில் கொடுக்கக்கூடிய சின்னமுத்து வக்சீனைப் (Vaccine) பெற்றுக் கொள்ளலாம்.

இதன்மூலம் சீவிய காலம்வரை சின்னமுத்து நோயிலிருந்து பாதுகாப்பைப் பெற்றுக் கொள்ளலாம்.

### ஜேர்மன் சின்னமுத்து

இந்த நோயானது பெரும்பாலும் இளைஞர், யுவதிகள், குழந்தைகள் மத்தியில் பொதுவாகத் தொற்றினை ஏற்படுத்தும் நோயாகும். பெண்கள் கர்ப்பமுற்று மூன்று மாதங்கள் கழிவதற்கு முன்னர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டால் பயங்கரமான விளைவுதான் ஏற்படக்கூடும். இதனாலேயே இந்த நோய் முக்கியம் பெறுகின்றது.

இந்தக் கட்டத்திலுள்ள பெண்களுக்கு ஜேர்மன் சின்னமுத்து ஏற்பட்டால் முதிர்மூலவுரு, இருதயம், கண், மூளை ஆகிய மிக முக்கியமான உறுப்புக்கள் பல்வேறு வழிகளில் பாதிக்கப்படலாம்.

ஒருவகை வைரஸ் மூலமாகவே ஜேர்மன் சின்னமுத்து உண்டாகின்றது. இந்த நோய் தொற்றி, சாதாரணமாக பருக்கள் உண்டாவதற்கு ஏழுநாட்களுக்கு முன்னரும் பருக்கள் மடிந்து ஏழு நாட்கள் கழியும் வரையும் இந்த வைரஸ் மூக்கு, வாய் என்பவற்றின் சுரப்புக்களிலும், குருதி, சிறுநீர், மலம் என்பவற்றிலும் காணப்படும்.

ஜேர்மன் சின்முத்து அவ்வளவு கொடூரமான நோயல்ல என்பதனால், இந்த நோய் வாய்ப்பட்டவர்கள் பெரும்பாலும் தமது நோய் பற்றி அறியாமல் இருக்கக்கூடும். இதற்குரிய நோயரும்பு காலம் 10 - 14 நாட்கள் வரையாகும்.

இது ஆரம்பத்திலே பிடிசுரம் போல் தோன்றினாலும், பின்காது, பின் மண்டைஓடு, பின்கழுத்து ஆகிய இடங்களில் 'நிணநீர் சுரப்பிகள் வீக்கமுற்று வலிப்பது இந்த நோய்க்குரிய காரணமாகும்.

அத்துடன் விரைவாகப் பரவி 2 - 3 நாடகளுக்குள் மறையும். செந்நிறப் பருக்கள் தோன்றுவது மற்றுமொரு முக்கியமான நோய்க்குணமாகும். முக்கியமாக கர்ப்பமுற்ற தறுவாயிலுள்ள பெண்கள் இந்த நோயிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளல் வேண்டும்.

பெண்பிள்ளைகள் பூப்படைவதற்கு (Puberty) முன்னர் இந்த நோயிலிருந்து பாதுகாப்புப் பெற்றுக் கொள்வதற்கு இப்போது பயன்படுத்தப்படும் வக்சீனைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

> "ஒவ்வொரு தனிமனித ஆரோக்கியமுமே சமூகத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் சமூகத்தின் ஒட்டுமொத்த ஆரோக்கியமே நாட்டின் அபிவிருத்திக்கான சிறந்த அடித்தளம்"

எனவேதான், இப்பொழுது வழங்கப்படும் சின்னமுத்து வக்சீனை குறிப்பிட்ட வயதை உடைய எல்லோரும் பெற்றுக் கொண்டு தாமும் ஆரோக்கியமாக வாழ்வதுடன், சிறந்த ஆரோக்கியமான சமூக உருவாக்கத்திற்கும் துணைபுரிதல் வேண்டும்.

இதனை நாம் அலட்சியம் செய்வோமாயின் எமது உடல் ஆரோக்கியமும் கெட்டுப் போவதுடன், அதனூடாக சமூக ஆரோக்கியத்தையும் சிதைத்துவிட்ட தவறுக்கு ஆட்பட நேரிடும்.

# பாகிஸ்தான் 7 விக்கெட்டுக்களால் கென்யாவைத் தோற்கடித்தது!



இங்கிலாந்தில் இடம்பெற்றுவரும் மினி உலகக் கிண்ணப்போட்டியில் நேற்று எட்ஜ்பாஸ்டன் மைதானத்தில் இடம்பெற்ற கென்ய - பாகிஸ்தான அணிகளுக்கிடையேயான ஆடடத்தில் பாகிஸ்தான் அப்ரிடியின் உதவியுடன் ஏழு விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணித்தலைவர் இன்ஸமாம் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார். இதனால் கென்ய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இதன்படி அந்த அணியின் ஆரம்ப வீரர்களாக ஒற்றியானோ, சா இருவரும களமிறங்கினர். ஆனாலும், அணி 2 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் சா எவ்வித ஓட்டத்தையும் பெறாமல் ஆட்டமிழந்தார்.

இதன்பின்னர் ஒற்றியாவுடன் ஒயுமா இணைந்தார். இவர்கள் இருவரும நிதானமாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்தவேளை ஒயுமா 23 ஓட்டங்களுடன் அப்ரிடியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார். இந்த ஜோடி இணைபபாட்டமாக 67 ஓட்டங்களைப் பெற்றது.

இதன்பின்னர் ரிக்கலோ ஓட்டமெதனையும பெறாமலும், ஆரம்பவீரா ஒற்றியோ 33 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இவர்களுக்குப் பின்வந்த வீரர்களும் சிறப்பாக விளையாடாததால் கென்ய அணி 32 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

அவ்வணி சார்பாக ஆரம்பவீரர் ஒற்றியோ 33, ஒயுமா 23, மோடி ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர். மற்றய வீரர்களில் நால்வர் ஓட்டமெதனையும் பெறாமலும் இருவர் தலா ஒவ்வொரு ஓட்டத்துடனும், ஒருவர் இரண்டு ஓட்டத்துடனும் ஆட்டமிழந்தனர். பாகிஸ்தான் உதிரிகளாக 16 ஓட்டங்களை விட்டுக்கொடுத்தது.

பந்துவீச்சில் அப்ரிடி சிறப்பான முறையில் 6 ஓவர்கள் பந்துவீசி ஒரு ஓட்டமற்ற ஓவர் அடங்கலாக 11 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், சொகைப் மலிக் 3 விக்கெட்டுக்களையும், நவீத அல் கசன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 95 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய பாகிஸ்தான் அணி 18.4 ஓவரில் 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இதில் யாசீர ஹமீத் 41, இம்ரான் பர்கத் ஆட்டமிழக்காமல் 38, அப்ரிடி 3, அப்துல் ரஸாக் ஆட்டமிழக்காமல் 7 ஓட்டங்களையும் பெற்றனர். அண்மைக்காலமாக பாகிஸ்தான் அணியில் சிறப்பாக விளையாடிவரும் சொகைப் மலிக் நேற்றைய போட்டியில் ஓட்டமெதனையும் பெறாமல் ஆட்டமிழந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பந்துவீச்சில் ரகீப் ஏ.ஜி.ஏ 2 விக்கெட்டுக்களையும், சுஜி ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.






**மினி உலகக் கிண்ணத்தில் இன்று நடைபெறும் ஆட்டம்**

**அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து**

**மைதானம் – ஓவல்**

# 138 ஓட்டங்களால் பங்களாதேஷ் மேற்கிந்திய அணியிடம் தோல்வி!




மினி உலக கிண்ணத் தொடரில் நேற்று மேற்கிந்தியத்தீவுகள் - பங்களாதேஷ் அணிகளுக்கிடையில் ரோஸ்பவுல் மைதானத்தில் இடம்பெற்ற மற்றொரு ஆட்டத்தில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 138 ஓட்டங்களால் பங்களாதேஷைத் தோறகடித்தது.

நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத்தீாமானித்தது. இதனால் மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. அவ்வணியின் கைல் மற்றும் ஹின்ட்ஸ் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்கினர். அவர்கள் இருவரும் பங்களாதேஷ் பந்து வீச்சாளர்களின் பந்து வீச்சுக்களை விளாசித்தள்ளினர். ஆரம்ப வீரர்கள் இருவரும் தமக்கிடையேயான இணைபபாட்டமாக 192 ஓட்டங்களைக் குவித்தனர்.

இதில் ஹின்ட்ஸ் 119 பந்துகளில் 2 சிக்ஸர், 8 பவுண்டரிகள் அடங்கலாக 82 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பைஸ்யாவின் பந்து விச்சில் ஹீசைனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து கைல்லுடன் இணைந்தார் ச்ர்வான். இவர்கள் சிறப்பாக விளையாடிக் கொண்டிருக்கையில் கைல் 132 பந்துகளில் 6 பவுண்டரிகளுடன் 99 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் பைஸ்யாவின் பந்து விச்சில் காலித் மசூத்திடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

பின்னர் சர்வானுடன் லாரா இணைந்தார் இவர் 7 பந்துகளில் 2 சிக்ஸர், ஒரு பவுண்டரி அடங்கலாக 20 ஓட்டங்களைப் பெற்றிருக்கையில் ரன அவுட்டானார். பின்னர் சந்திரபோல் இணைந்தார். சர்வானும், சந்திரபோலும் இறுதிவரை ஆட்டமிழக்காமல் முறையே 30, 18 ஓட்டங்களைப் பெற்றனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 50 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 269 ஓட்டங்களைக் குவித்தது.

பந்துவீச்சில் பைஸ்யா மட்டுமே இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். பின்னர் பெரிய இலக்கான 270 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ஆட்டத்தை ஆரம்பித்த பங்களாதேஷ் அணி வீரர்களை மேற்கிந்தியத் தீவுகள் அணிப் பந்து வீச்சாளர்கள் நிலைத்து நின்று ஆடவிடவில்லை.

இறுதியில் அவ்வணி 39.3 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும இழந்து 131 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. அவ்வணி சாரபில் மொகமட அஷ்ரபுல் 10, அப்ரப் அகமட் 21, காலித மசூத் ஆட்டமிழக்காமல் 34 மொகமட் ரபிகியூ 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலான் 10 ஓவர்கள் பந்துவீசி 4 ஓட்டமற்ற ஓவர்களாக 29 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், கைல் 2 விக்கெட்டுக்களையும் பிரட்சோ, சமி, பிறாவோ மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.



# அவுஸ்ரேலியாவுடனான போட்டியில் டெண்டுல்கர் ஆடுவது சந்தேகமே!

முழங்கை காயத்தால் அவதிப்படும் சச்சின் டெண்டுல்கர் குணமாகி வருகிறார். ஆனாலும், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் அவர் பங்கேற்பது இன்னும் உறுதிசெய்யப்படவில்லை.

சச்சின் டெண்டுல்கர் இடது முழங்கை காயத்தால் (டென்னிஸ் எல்போ) அவதிப்படுகிறார். இந்தப் பிரசசினையால் ஹொலன்ட் முத்தரப்புத் தொடர் நட்வெஸ்ட் டிராபி மற்றும் தற்போதய மினி உலகக் கோப்பை என வரிசையாக மூன்று தொடர்களில் அவர் பங்கேற்க வில்லை.

நான்கு போட்டிகள் கொண்ட அவுஸ்ரேலிய அணியின் இந்தியத் தொடரிலாவது (அடுத்தமாதம்) அவர் பங்கேற்கமுடியுமா என்ற சந்தேகம் நிலவிவந்தது.

சசசினின் இடதுகை காயம் கொஞ்சம் கொஞ்சமாகக் குணமாகி வருகிறது. குடும்பத்துடன் சச்சின் லண்டனில் இருக்கிறார். காயத்துக்கு அங்கு சிகிச்சை மேற்கொண்டு வருகிறார். இந்திய கிரிக்கெட் அணியின் டொக்டர் ஆன்ட்ரு லீஸ் அவரை தொடர்ந்து கண்காணித்து வருகிறார்.

இனனும் ஒன்று அல்லது இரண்டு வாரத்தில் சச்சின் பயிற்சி மேற்கொள்ள முடியும் என்று ஆன்ட்ரு லீபஸ் நம்பிக்கை தெரிவிக்கிறார்.

அவரது உடல்நிலைப்பற்றி லீஸ் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்- சிகிசசை முறைகளை சச்சினின் உடல் ஏற்றுக்கொள்கிறது. அவர் குணமாகி வருகிறார். குறைந்தது இரண்டு வாரங்களில் அவர் மீண்டும் பயிற்சியை ஆரம்பிக்கமுடியும் என்று நம்புகிறேன்.

ஆனால், அவுஸ்ரேலியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில்



அவர் பங்கேற்கமுடியுமா என்று இப போது உறுதியாகச்சொல்லமுடியாது. அவரது உடல் நிலை முழுவதும் தேறனால் மட்டுமே டெஸ்போட்டியில் பங்கேற்கமுடியும். குறைந்தது நாள் முழுவதும் கொஞ்சம்கூட வலியின்றி 300 பந்துகளையாவது அவர் விளையாட முடிநதால் காயம் குணமாகி விட்டது எனறு அர்த்தம் என அவர் மேலும் தெரிவித்தார்.




# ஆண்கள் கரப்பந்தாட்ட அணி ஜேர்மனியில் கம்பிநீட்டியது



(கொழும்பு)

ஜேர்மனியில் போட்டி ஒன்றில் கலந்துகொள்ளச் சென்ற இலங்கையின் ஆண்கள் கரப்பந்தாட்ட அணியின் வீரர்கள் அனைவரும் பிரான்ஸுக்குத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 3 வாரங்களாக ஜேர்மனியில் தங்கியிருந்த இந்த வீரர்கள் தாம மீண்டும் இலங்கை செல்ல முடியாது எனத் தெரிவித்து ஆங்கிலத்தில் கடிதம் ஒன்றை எழுதிவிட்டுச் சென்றதுடன் பாதணிகள், போட்டிக்குரிய ஆடைகள் உள்ளிட்ட பல உடமைகளை கைவிட்டுச் சென்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்களைத் தேடும் பணியில் ஈடுபட்டுள்ள பிரான்ஸ் பொலிஸார் ஜேர்மனியிலிருந்து பிரான்ஸுக்குள் ஊடுருவிய 23 வீரர்களும் இத்தாலிககுச் சென்றிருக்கலாம் எனச் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

கடந்த வருடமும் லண்டன் சென்ற இலங்கைப் பெண்கள் கிரிக்கெட் அணியிலிருந்து 3 பேர் லண்டனுக்குள தப்பிச் சென்றமையும், முன்னரும் விளையாட்டுப்போட்டிகள் பலவற்றிற்கு சென்ற பலர் தலைமறைவாகியமையும் குறிப்பிடத்தக்கது.

# மினி உலகக் கிண்ணத்தை கைப்பற்றப்போவது யார்?

## பாகிஸ்தான் பயிற்சியாளர் கருத்து



மினி உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் யார் வெற்றி பெறுவர் எனபதைக் கணிக்க முடியாதிருபபதாக பாகிஸ்தான் அணியின் பயிற்சியாளர் பொப் வூல்மர் கருத்து வெளியிடுகையில் -

கிரிக்கெட் ரசிகர்களின் எதிர் பார்ப்புகளை பூர்த்திசெய்து கொண்டிருக்கிறது மினி உலகக் கோப்பைத் தொடர். பலமான அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து அணிகள் இடம்பெற்ற பிரிவில் அமெரிக்கா மாட்டிக்கொண்டது பரிதாபந்தான்.

இந்தப் பிரிவைப் பொறுத்தவரை நியூஸிலாந்துக்கே அதிக வாய்ப்பு என்பது எனது கணிப்பு. அவுஸ்ரேலியா சிறந்த அணிதான். ஆனாலும் முன்பு போல அந்த அணி அச்சுறுத்தக்கூடியதாக இல்லை.

இந்தியா, பாகிஸ்தான போட்டி பற்றி பேசாமல் இருக்கமுடியாது. இந்தத் தொடரிலேயே மிக அதிகம் எதிர்பார்க்கப்படும் போட்டி அதுதான். விற்பனை தொடங்கிய ஒன்றரை மணி நேரத்தில் இந்தப் போட்டிக்கான அனைத்து டிக்கெட்டுகளும் விற்றுத் தீர்ந்துவிட்டன.

அதற்குப் பிறகு வந்தவர்களுக்கு 'மன்னிக்கவும் டிக்கட் இல்லை' என்ற பதில் தான் கிடைத்தது என்ற செய்தி உங்களுக்கு ஏற்கனவே தெரிந்திருக்கும்.

இந்தப் போட்டியில் யார் ஜெயிப்பார்கள் என்று என்னால் கணிக்க முடியவில்லை. என்னால் மட்டுமல்ல யாராலும் அவ்வளவு சுலபமாகக் கணிக்கமுடியாது. முடிவு எப்படி இருந்தாலும் ஆட்டம் நிச்சயம் ரசிகர்களைக்கவரும் வகையில் இருக்கும் என்பது மட்டும் உறுதி எனத் தெரிவித்தார்.

# தென்மராட்சி வலயமட்ட உதைபந்தாட்டப் போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலய மட்டத்தில் நடைபெற்றுவரும் இவ்வருடத்துக்கான உதைபந்தாட்டத் தொடரின் கால் இறுதி, அரைஇறுதி, மற்றும் மூன்றாம் இடத்துக்கான போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகள் தொடர்பான விபரங்களை தென்மராட்சி கல்விவலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இன்று தொடக்கம் 22 ஆம் திகதி வரையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டிகள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளன.

இன்று குழுத்தெரிவின் 16 வயதுப் பரிவல், கைதடி வித்தியாலயத்தை எதிர்த்து நாவற்குழி மகா வித்தியாலயம் மோதுகின்றது. 12 வயதுப்பிரிவின் கீழ் அரையிறுதிப் போட்டிகளில் - கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தை எதிர்த்து மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயமும், சாவகச்சேரி இந்துக் கல்லூரியை எதிர்த்து வரணி மகா வித்தியாலயமும் மோதுகின்றன.

16 வயதின் கீழான காலிறுதிப் போட்டிகளில் - வீரசிங்கம் மகாவித்தியாலயத்தை எதிர்த்து டிறிபேக் கல்லூரியும், மட்டுவில் கமலாசினியை எதிர்த்து கச்சாய் அ.த.க பாடசாலையும் மோதுகின்றன.

நாளை வெள்ளிக்கிழமை 16 வயதின் கீழான காலிறுதிப்போட்டிகளில் - சாவகச்சேரி இந்துக்கல்லூரியை எதிர்த்து வரணி மகா வித்தியாலயமும், 14 வயதுப் பரிவில் அரையிறுதிப்போட்டியில் - வரணி மகா வித்தியாலயத்தை எதிர்த்து திருநாவுக்கரசு மகாவித்தியாலயமும், முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தை எதிர்த்து டிறிபேக் கல்லூரியும் மோதவுள்ளன.

இதே தினம் 18 வயதுப் பிரிவில்- டிறிபேக் கல்லூரியை எதிர்த்து கச்சாய் அ.த.க. பாடசாலை அணியும் மோதவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (31)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland




தியாகி திலீபனின் 17 ஆவது ஆண்டு நினைவுநாளின் ஆரம்ப நிகழ்வு நேற்று நல்லூரில் இடம்பெற்ற போது கடற்புலிகளின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் அருணன் தேசியக் கொடியேற்றுவதையும், மாவீரர் லெப்.அர்ச்சுனாவின் தந்தையார் ஈகச்சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.

# புலிகளின் நெகிழ்ச்சிப் போக்கை அரசாங்கம் பயன்படுத்த வேண்டும்!

## தேசிய சமாதானப்பேரவை செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

20 வருடங்களுக்கும் மேலாக தொடர்ந்த போரை நிறுத்தி -சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக மீளவும் பேச்சுக்களை ஆரம்பிக்க நெகிழ்வுப் போக்கைக் கடைப்பிடிக்க புலிகள் தயாராக உள்ளார்கள். அரசாங்கம் இதனைப் பயன்படுத்தி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டுமென தேசிய சமாதானப் பேரவையின் செயலாளர் டொக்டர் ஜெகான் பெரேரோ தெரிவித்தார்.

தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் வடக்கிற்கு விஜயம் மேற்கொண்டுள்ள தென்பகுதி பத்திரிகையாளர் குழு நேற்று மாலை நாவலர் மண்டபத்தில் குடாநாட்டுப் பத்திரிகையாளர்களையும், பொது அமைப்பு பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியது.

இதில் உரையாற்றிய சமாதானப் பேரவை செயலாளர் மேலும் கூறுகையில் -

விடுதலைப் புலிகள் இடைக்கால நிர்வாக சபை வழங்கப்பட்டால் தான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்க முடியும் எனத் தெரிவித்து வந்தனர். ஆனால், இன்று அதன் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்கத் தயாராக உள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

புலிகளின் நெகிழ்வுப் போக்கு வரவேற்கத்தக்கது. இதனைச் சரியான முறையில் பயன்படுத்தி அரசும் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

அரசுடன் இணைந்துள்ள ஜே.வி.பியினர், ஆரம்பம் முதலே புலிகளை எதிர்த்து வருகின்றனர். ஜே.வி.பியையும் அரவணைத்தே பேச்சுக்களை மீள ஆரம்பிக்க வேண்டிய சூழலில் அரசு உள்ளது.

ஜே.வி.பியை ஒதுக்கி விட்டு ஐ.தே.கவுடன் இணைந்து பேச்சுக்களை ஆரம்பித்தாலும் ஐ.தே.க பொறுத்த கட்டத்தில் கைவிட்டு விடும் என்ற சந்தேகம் அரசிடம் உண்டு ஜே.வி.பி.யும், புலிகளும் முற்றிலும் மாறுபட்ட கருத்தையே கொண்டுள்ளனர்.

புலிகள் ஒருதலைப்பட்சமாக பேச்சிலிருந்து விலகியமையும் தென்பகுதி மக்கள் மாற்று அரசு ஒன்றைத் தெரிவு செய்யக் காரணியாக அமைந்தது என மேலும் தெரிவித்தார்.(111)

### தீர்வுகள்...

பொருளாதாரத்தை கடந்தகால யுதத நடவடிக்கை காரணமாக முழுமையாக இழந்தவர்கள்.

எனவே - இந்த மக்களின் மனிதாபிமானத் தேவைகள் எவையும் இதுவரை பூர்த்தி செய்யப்படவிலலை. இயல்பு வாழ்க்கையும் தோற்றுவிக்கப்படவில்லை.

இதேவேளை - சமாதானத்துக்கான எந்தத் தீர்வுகளும், முன்வைக்கப்படவில்லை. மாறாக, மனிதாபிமான அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த நிவாரண உதவிகளும், நிறுத்தப்படவுள்ளது என்ற அரசின் செய்தியானது எமது மக்களை விரக்தியின் விளிம்புக்குள் தள்ளியுள்ளது என்பதை நாம் அவர்களுக்கு தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளோம்.

இந்த நிலையில் - இந்த விடயம் தொடர்பாக அனைத்துத் தரப்பினருடனும் பேசி முன்னேற்றகரமான முயற்சிகளுக்கு வழிகோலுவதாக சொல்ஹெய்ம் தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

### யுத்தம் ஏற்படக்கூடாதென்பதையே....

தெரிவிக்கையில்-

இரண்டு தரப்பினரும் யுத்த நிறுத்த மீறல்களில் தொடர்புடையவர்களாகக் காணப்படுகின்றனர் இதற்கான காரணங்களையும் தெரிவிக்கின்றனர்.

பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிப்பதற்கு மக்கள் தமது அழுத்தங்களை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க வேண்டும். எமது விஜயத்தின் தற்போதைய நிலைமை தொடர்பாக ஆராய்வதே - அந்த வகையில் யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான தமிழ் பேசும் மக்களின் அமைப்பு, பொதுஅமைப்பு பிரதிநிதிகளைப் சந்தித்து கலந்துரையாடியுள்ளோம்.

வெளிநாடுகள் சில சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுவதாக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் தவறானவை உலக நாடுகள் அனைதும் இலங்கையில் மீண்டும் ஓர் யுத்தம் ஏற்படாது நிரந்தர சமாதானம் ஒன்று நிலவுவதையே விரும்புகின்றன. அதற்காக நாம் இறுதிவரை உழைப்போம்.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறும் வகையில் சில தமிழ்க் குழுக்களும் செயறபட்டுள்ளன. சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக கருத்துக்கள் எதுவும் தெரிவிக்கமுடியாது. விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச் செல்வனை சந்தித்தபின்னர் ஜனாதிபதியைச் சந்திக்க விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# இந்தியக் கடற்படைக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில்!



இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண்பிரகாஷின் இலங்கைக்கான விஜயத்தின் ஒரு கட்டமாக இந்தியக் கடற்படையின் ஏவுகணைப் போர்க்கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகம் வந்துள்ளது. விமான எதிர்ப்பு மற்றும் தாக்குதல் ஏவுகணைகளைக் கொண்ட ஐ.என். எஸ். கங்கா எனற போர்க்கப்பலே கொழும்புத் துறைமுகத்தை நேற்று வந்தடைந்தது.

இந்திய இலங்கைக் கடற்படைகளின் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் வந்துள்ள இந்தக் கப்பல், சுமார்-3850 தொன் எடையுள்ளது. 126.4 மீற்றர் நீளமான இப்போர்க் கப்பல், 27 நொட்ஸ் வேகத்தில் செல்லக்கூடியதுடன் - இதில் 40 அதிகாரிகள் மற்றும் 13 விமானிகள், அடங்கலாக 313 மாலுமிகள் பணியாற்றுகின்றனர். விமான எதிர்ப்பு ஏவுகணைகள், கடல் சண்டைக்கான ஏவுகணைகள், நீரடித் தாக்குதல் முறியடிப்பு ஏவுகணைகள் போன்ற நவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட இந்தப் போர்க்கப்பலில் 3 ஹெலிகொப்டர்களும் இருப்பது குறிப்பிடத்தக்கது.

### இன்னுமொரு போர்க்கப்பலை...

அண்மைக் காலமாக - விடுதலைப் புலிகள் துறைமுகத்தைச் சூழவுள்ள பகுதிகளில் பதுங்கு குழிகளை அமைத்து அர்களது நடவடிக்கைகளை அதிகரித்திருப்பதாகத் தெரியவருகின்றது. எனினும் - இந்த அச்சுறுத்தலை எதிர்கொள்வதற்கு நாம் தயாராகவே உள்ளோம்.

இந்தியக் கடற்படைத் தளபதியின் வருகை மூலம் இரு நாட்டுக் கடற்படைக்கும் இடையிலான தொடர்புகள் அதிகரிக்கவும் பரஸ்பர உறவு வளரவும் வழி ஏற்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே சரியான வழி. இதனை நான் 2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற கடற்படையினருக்கான விளையாட்டு விழாவில் கூறியிருந்தேன். இனப்பிரச்சினைக்கு யுத்தத்தினால் தீர்வுகாண முடியாது. பேச்சுவார்த்தை மூலமாக அரசியற் தீர்வொன்றைக் காண்பதே சரியான வழியாகும்.

இலங்கைக் கடற்படை ஆரம்பத்திலிருந்தே தனது சிறப்பான போர் யுக்திகளைக் கையாண்டிருந்தால் - இன்று எழுந்துள்ள பல பிரச்சினைகளுக்கு எப்போதோ தீர்வு கண்டிருக்க முடியும்.

கடற்படை மிக விரைவில் ஒழுங்கமைக்கப்பட்டு மீள கட்டமைக்கப் படவுள்ளது. இலங்கையைச் சூழவுள்ள கடற்பரப்பு அனைத்தும் இலங்கை அரசாங்கத்துக்குரியதாகும். நாட்டின் பாதுகாப்பை உறுதிப் படுத்தும் வகையில் படையினருக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இலங்கைக் கடற்படையை வலிமைப்படுத்த புதிய கப்பல்களும், ஆட்பலமும் சேர்க்கப்படுவது அத்தியாவசியமானது.

இந்தப் பிரச்சினைக்கு யுத்தத்தினால் தீர்வு காணமுடியாது. பேச்சுவார்த்தை மற்றும் அரசியற் தீர்வு ஒன்றைக் காணவேண்டும் என்ற எனது நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை. எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### கூட்டுப்படைத்...

தளபதி ஒருவர் பதவியேற்றமை இதுவே முதற் தடவையாகும்.

2001 ஜனவரி முதலாம் திகதி இவர் கடற்படைத்தளபதியாக நியமிக்கப்பட்டிருந்தார். 37 வருட காலம் கடற்படையில் பணியாற்றியுள்ள இவர், 1966 நவம்பர் 14 ஆம் திகதி கடற்படையில் இணைந்தார்.

கடற்படையில் பல்வேறு பொறுப்புக்களையும் வகித்த இவர் நான்கு கடற்படைகளின் தளபதிகளில் கீழ் கடற்படை நடவடிக்கை இயக்குனராகப் பணியாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### யாழ்.குடாநாட்டு...

இதன்பின்னர் காலை 11.30 மணியளவில் யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதியை யாழ். மாவட்ட அரசியற்துறை செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இதனைத் தொடர்ந்து மதியம் 1.45 மணியளவில் பொது அமைப்புப் பிரதிநிதிகளை பொது அமைப்புக்களின் ஒன்றியத்தில் வைத்து சந்தித்துக் கலந்துரையாடினர்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்மிடம் யாழ்.குடாநாட்டின் பல்வேறு பொது அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் தமது நிலைப்பாடுகள் தொடர்பாகவும், தமது வேண்டுகோள் தொடர்பாகவும், யாழ். மாவட்ட அரசியற்துறைச் செயலகத்தில் வைத்து சுமார் 15 இற்கு மேற்பட்ட மகஜர்களைக் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை எரிக் சொல்ஹெய்ம பலாலி விமானப்படைத் தலைமையகத்தில் யாழ்.குடாநாட்டுக்கான படைத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோனையும்,

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கண்காணிப்புக் குழுப் பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினார்.

இன்று கிளிநொச்சியில் எரிக் சொல்ஹெய்ம் மற்றும் ஹான்ஸ் பிரட்ஸ்கர் ஆகியோா புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழச் செல்வனைச் சந்தித்துக் கலந்துரையாடவிருப்பது குறிப்பிடத்தக்கது.

**தேசிய லொத்தர் சபை — மஹஜன சம்பத பெறுபேறுகள்**

சீட்டிழுப்பு இல:- 1648 திகதி:- 14.09.2004

வெற்றி இலக்கங்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| L | 2 | 2 | 2 | 1 | 1 | 5 |

(927)

## மரண அறிவித்தல்

### நமசிவாயதேசிகர் கமலாம்பிகை அம்மா

மயிலிட்டி தெற்கு - கட்டுவனைச் சேர்ந்த அமரர் இலக்கண வித்தகர் இ.நமசிவாயதேசிகர் அவர்களின் துணைவியார் கமலாம்பிகை அம்மா அவர்கள் 15.09.2004 புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு காலமானார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

.இந்துக் கல்லூரி ஒழுங்கை,.
பண்டத்தரிப்பு.

தகவல்:
ந.பாலச்சந்திரன்
(மகன்)




இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 16.09.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.